www.Padasalai.Net www.CBSEtips.in

# பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

புதிய பதிப்பு

# தமிழ் அமுது 7



முப்பருவ கையேடு

பருவம் -1 பருவம் -2 பருவம் -3

**நூலின் கட்டமைப்பு:**

பாடநூலில் இருப்பது போன்றே கற்றல் நோக்கங்கள், பாடலின் பொருள், நுழையும் முன் , நூல்வெளி, மனவரைபடம், பொருள் கூறுக, சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல், குறுவினா, சிறுவினா, நெடுவினா, சிந்தனை வினா, விரிவானம், கூடுதல் வினாக்கள், தெரிந்து தெளிவோம், கற்பவை கற்றபின், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கட்டுரை, கடிதம், அலகுத் தேர்வுகள், மனப்பாடப் பாடல்கள்.

இலக்கு 100/100

**பெங்குயின் பப்ளிகேஷன்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in

பெங்குயின்

# தமிழ் அமுது

7

"புதிய பாடத்திட்டத்தின் படி
தயாரிக்கப்பட்டுள்ளது"

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை
ரூ.219/-

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in

# முன்னுரை

கடவுளின் ஆசிர்வாதம் இருந்தால் எல்லாம் சாத்தியமே

Dr.A.P.J. அப்துல் கலாம்.

மதிப்பிற்குரிய தாளாளர், தலைமையாசிரியர், தலைமையாசிரியை, முதல்வர் மற்றும் அன்பிற்கினிய தமிழாசிரியப் பெருமக்களே!

நாங்கள் 7 ஆம் வகுப்பிற்கான (பெங்குயின்) தமிழ் அமுது, புதிய பாடத்திட்டத்தின் படி புதிய பதிப்பாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறோம்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமன்று. எதிர்காலவாழ்விற்கும் அடித்தளம். உங்கள் கைகளில் தவழும் பெங்குயின் தமிழ் அமுது உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த தமிழ் அமுதில், பாடநூலில் உள்ள வினா மட்டுமில்லாமல் கூடுதலாக சிலவினாக்களும் அரசுத்தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அனுபவமிக்க ஆசிரியர்களால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்துவதால் தேர்விற்கு மட்டுமின்றி வாழ்விலும் போட்டித் தேர்விற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எளிய இனிய மொழிநடை, கருத்துகளின் கோர்வையான அழகு,தமிழறிவை வளர்க்கும் சிந்தனைத் துளிகள். கற்பவை கற்றபின் பகுதியும் மனதில் அணிவகுக்கும். இவையெல்லாம் உள்ளடக்கிய எளிய தெளிவான பெங்குயின் தமிழ் அமுதை நன்கு வாசியுங்கள்..... நினைவில் நிலைநிறுத்துங்கள். அரசுப்பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்.

எங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பதிப்பகத்தார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# TO ORDERS

## SCHOOLS and TEACHERS

FOR ORDERS CONTACT 8925612359 8643007972 7010414574 8248737898

## STUDENTS

Books can be obtained through VPP

# PAYMENT METHOD

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/C Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 328150050800129 |
| Bank Name | : | TAMIL NADU MERCANTILE BANK |
| IFSC | : | TMBL0000328 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

| | | |
|---|---|---|
| A/c Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 39212649923 |
| Bank Name | : | STATE BANK OF INDIA |
| IFSC | : | SBIN0000921 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

**After Deposit, please call this no. 8925612359**

## MOBILE PAYMENTS

G Pay

8925612359

PENGUIN PUBLICATIONS

By Any Payment APP

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur**

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| மனப்பாடப் பாடல்கள் | | | 1 |
| முதல் பருவம் | | | |
| 1 | மொழி | எங்கள் தமிழ் | 6 |
| | அமுதத்தமிழ் | ஒன்றல்ல இரண்டல்ல | 11 |
| | | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | 15 |
| | | சொலவடைகள் | 20 |
| | | குற்றியலுகரம், குற்றியலிகரம் | 22 |
| | | அலகுத் தேர்வு | 31 |
| 2 | இயற்கை | காடு | 35 |
| | அணிநிழல் காடு | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | 40 |
| | | விலங்குகள் உலகம் | 44 |
| | | இந்திய வனமகன் | 48 |
| | | நால்வகைக் குறுக்கங்கள் | 51 |
| | | திருக்குறள் | 59 |
| | | அலகுத் தேர்வு | 63 |
| 3 | நாடு, சமூகம் | புலி தங்கிய குகை | 67 |
| | நாடு அதை நாடு | பாஞ்சை வளம் | 71 |
| | | தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் | 76 |
| | | கப்பலோட்டிய தமிழர் | 80 |
| | | வழக்கு | 83 |
| | | அலகுத் தேர்வு | 91 |
| இரண்டாம் பருவம் | | | |
| 4 | அறிவியல், தொழில்நுட்பம் | கலங்கரை விளக்கம் | 95 |
| | அறிவியல் ஆக்கம் | கவின்மிகு கப்பல் | 98 |
| | | தமிழரின் கப்பற்கலை | 103 |
| | | ஆழ்கடலின் அடியில் | 108 |
| | | இலக்கியவகைச் சொற்கள் | 111 |
| | | அலகுத் தேர்வு | 118 |
| 5 | கல்வி | இன்பத்தமிழ்க் கல்வி | 122 |
| | ஓதுவது ஒழியேல் | அழியாச் செல்வம் | 127 |
| | | வாழ்விக்கும் கல்வி | 131 |
| | | பள்ளி மறுதிறப்பு | 135 |
| | | ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம் | 139 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | அலகுத் தேர்வு | 148 |
| 6 | **கலை, அழகியல்** | ஒரு வேண்டுகோள் | 152 |
| | **கலை வண்ணம்** | கீரைப்பாத்தியும் குதிரையும் | 158 |
| | | பேசும் ஓவியங்கள் | 161 |
| | | தமிழ் ஒளிர் இடங்கள் | 166 |
| | | தொழிற்பெயர் | 168 |
| | | திருக்குறள் | 170 |
| | | அலகுத் தேர்வு | 178 |
| **மூன்றாம் பருவம்** | | | |
| 7 | **நாகரிகம், தொழில், வணிகம்** | விருந்தோம்பல் | 182 |
| | **நயத்தகு நாகரிகம்** | வயலும் வாழ்வும் | 185 |
| | | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | 190 |
| | | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | 195 |
| | | அணி இலக்கணம் | 198 |
| | | அலகுத் தேர்வு | 205 |
| 8 | **அறம், தத்துவம், சிந்தனை** | புதுமை விளக்கு | 208 |
| | **ஒப்புரவு ஒழுகு** | அறம் என்னும் கதிர் | 212 |
| | | ஒப்புரவு நெறி | 215 |
| | | உண்மை ஒளி | 219 |
| | | அணி இலக்கணம் | 222 |
| | | திருக்குறள் | 229 |
| | | அலகுத் தேர்வு | 232 |
| 9 | **மனிதம், ஆளுமை** | மலைப்பொழிவு | 235 |
| | **மானுடம் வெல்லும்** | தன்னை அறிதல் | 239 |
| | | கண்ணியமிகு தலைவர் | 243 |
| | | பயணம் | 246 |
| | | ஆகுபெயர் | 249 |
| | | அலகுத் தேர்வு | 257 |

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925012059 www.CBSEtips.in



# மனப்பாடச் செய்யுள்

## பருவம் 1

## இயல் - 1

### எங்கள் தமிழ்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்.

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

## இயல் - 2

### காடு

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் - கிளியே
நரியெலாம் ஊளையிடும்.

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே!

**- சுரதா**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## திருக்குறள்

**புறங்கூறாமை**

4. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

**வாய்மை**

7. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.
9. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

**இறைமாட்சி**

10. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

**- திருவள்ளுவர்**

## இயல் - 3

### புலி தங்கிய குகை

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

**- காவற்பெண்டு**

## பருவம் 2

## இயல் - 1

### கலங்கரை விளக்கம்

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை....

**- கடியலூர் உருத்திரங் கண்ணனார்**

## இயல் - 2

### அழியாச் செல்வம்

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வல்வார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in



எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற. **- சமண முனிவர்**

## கீரைப்பாத்தியும் குதிரையும்

**(இரட்டுற மொழிதல்)**

கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால் - முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே. **- காளமேகப்புலவர்**

## திருக்குறள்

**கல்வி**

3. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

**தெரிந்து செயல்வகை**

6. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

**இடுக்கண் அழியாமை**

10. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர் **- திருவள்ளுவர்**

# பருவம் 3

### இயல் - 1

## விருந்தோம்பல்

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு - நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல். **- முன்றுறை அரையனார்**

### இயல் - 2

## புதுமை விளக்கு

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று. **- பொய்கை ஆழ்வார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in


## அறம் என்னும் கதிர்

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். **- முனைப்பாடியார்**

## திருக்குறள்

### வினைசெயல் வகை

2. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

### நாடு

5. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

### பெருமை

9. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். **- திருவள்ளுவர்**

## மலைப்பொழிவு

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் - அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்!

தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு - தினம்
தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்
பேசும் பொய்யுறவு!
இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண்கனவு - தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு! **- கண்ணதாசன்**


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் ஒன்று

# அமுதத் தமிழ்




**கற்றல் நோக்கங்கள்**

- செய்யுளைப் படித்து மையக்கருத்தை எடுத்து உரைத்தல்.
- பழந்தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்கள் வரலாற்றை அறிதல்.
- பேச்சு மொழி, எழுத்து மொழியின் நுட்பங்களை அறிதல்.
- சொலவடைகளில் பொதிந்துள்ள சமூக உண்மைகளைக் கண்டறிதல்.
- குற்றியலுகர, குற்றியலிகரச் சொற்களை அடையாளம் கண்டு அதன் வகைகளை அறிதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் ஒன்று

கவிதைப்பேழை

# எங்கள் தமிழ்


3BUISB

## நுழையும் முன்




உலக மொழிகளில் தொன்மையானது நம் தமிழ்மொழி. அது மென்மையும் இனிமையும் வளமையும் உடையது; வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது; காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று, என்றும் இளமையோடு திகழ்வது. அத்தகு தமிழ்மொழியின் சிறப்பை நாமக்கல் கவிஞரின் பாடல் மூலம் அறிவோம்.

## மனவரைபடம்




*அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்*

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

## பாடலின் பொருள்

நம் தாய்மொழியாம் தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது. தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி ஆகும்.

## நூல்வெளி



**நூல்வெளி**



இப்பாடலின் ஆசிரியரை, நாமக்கல் கவிஞர் என்றும் அழைப்பர். இவர் தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர். காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் காந்தியக்கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார். தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர். மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள். என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்துத் தரப்பட்டுள்ளது.



## கற்பவை கற்றபின்

**1. "எங்கள் தமிழ்" - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

*அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in


கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்*

**2. பின்வரும் நாமக்கல் கவிஞர் பாடலைப் படித்துச் சுவைக்க.**

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!... (கத்தியின்றி...)
கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட!.... (கத்தியின்றி....)

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ____________.
   அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்
2. 'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும் இ) குர + லாகும் ஈ) குர + ஆகும்
3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானெலி

**விடை:** 1. (அ) வழி
2. (ஆ) குரல்+ ஆகும்
3. (ஆ) வானொலி

### ★ நயம் அறிக ★

1. 'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

1. கொல்லா |எல்லா |அன்பும்
கொள்கை |என்றும்|அச்சமும்

2. 'எங்கள் தமிழ்' பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



2. கொல்லா | அன்பும்
   எல்லா. | இன்பம்
3. ‘எங்கள் தமிழ்’ பாடலில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.
3. புகழாது|குறியாக
   இகழாது|நெறியாக
   இன்புறவே|ஊக்கிவிடும்
   அன்புறவே|போக்கிவிடும்
   வானொலியாம்
   தேன்மொழியாம்

## ★ குறுவினா ★

**1. தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

- நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத்தரும்.
- எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பையும் அறத்தையும் தந்து உதவும் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழி .
- அனைவரிடத்திலும் அச்சத்தைப் போக்கி இன்பத்தையும் தரும்.

**2. தமிழ் மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

- தமிழ் மொழியைக் கற்றோர் பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேச மாட்டார்.
- தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

## ★ சிறுவினா ★

**1. எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

நம் தாய்மொழியாம் தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது. தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி ஆகும்.

## ★ சிந்தனை வினா ★

**1. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

தேன் இனிமையானதும் தூய்மையானதும் சுவை மிக்கதாகவும் மிகவும் இன்பம் கொடுப்பதாகவும் இருக்கும். அதைப் போலவே தமிழ் இனிமையானதும்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



தூய்மையானதும் சுவை மிக்கதாகவும் இன்பத்தைத் தருவதாகவும் அமைகிறது. எனவே, கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ ------------ உதவும்.
   **விடை:** அன்பும், அறமும்
2. நம் ---------- மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.
   **விடை:** தமிழ்
3. எங்கள் தமிழ் மொழி ------------ போன்ற மொழி ஆகும்.
   **விடை:** தேன்
4. தமிழகத்தின் முதல் அரசவை கவிஞர் ---------------------.
   **விடை:** நாமக்கல் கவிஞர்
5. காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் -------------
   **விடை:** வெ. ராமலிங்கனார்
6. உலக மொழிகளில் தொன்மையான மொழி ---------
   **விடை:** தமிழ் மொழி

### குறுவினா

**1. நாமக்கல் கவிஞர் எழுதியுள்ள நூல்கள் யாவை?**

மலைக்கள்ளன், சங்கொலி, என் கதை,நாமக்கல் கவிஞர் பாடல்கள்.

**2. நாமக்கல் கவிஞரை காந்தியக் கவிஞர் என அழைக்க காரணம் யாது?**

காந்தியடிகளின் கொள்கைகளால்ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் காந்தியக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்.

### சிறுவினா

**1. தமிழின் சிறப்புகள் சிலவற்றைக் கூறுக.**

- தமிழ் மொழி அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
- உலக மொழிகளின் தொன்மையானது.
- இனிமையும் வளமையும் உடையது.
- வாழ்க்கைக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுகிறது .
- தமிழ்மொழி தேன் போன்ற மொழியாக அமைகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



இயல் ஒன்று

கவிதைப்பேழை

# ஒன்றல்ல இரண்டல்ல


3ZVWR3

## நுழையும் முன்




தமிழ்நாடு நிலவளமும் நீர்வளமும் மட்டுமன்றிப் பொருள்வளமும் அருள்வளமும் நிறைந்தது. அதே போல தமிழ்மொழி இலக்கிய வளமும் இலக்கண வளமும் நிறைந்தது. தமிழக மன்னர்களும் வள்ளல்களும் கொடைத்திறன் மிக்கவர்களாக விளங்கினர். இக்கருத்துகளை விளக்கும் பாடலை அறிவோம்.

## மனவரைபடம்




ஒன்றல்ல இரண்டல்ல தம்பி சொல்ல
ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

தென்றல் தரும் இனிய தேன்மண முல்கமழும்
செங்கனியும் பொன்கதிரும் தந்துதவும் நன்செய்வளம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

பகைவென்ற திறம்பாடும் பரணிவகை - செழும்
பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை - வான்
புகழ்கொண்ட குறளோடு அகம்புறமும் - செம்
பொருள்கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப் பெருஞ்செல்வம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி - வான்
முகிலினும் புகழ்படைத்த உபகாரி - கவிச்
சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி - இந்த
வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## பாடலின் பொருள்

தமிழ்நாட்டின் பெருமைகளைக் கூறினால் அவை ஒன்றிரண்டல்ல பலவாகும். அவை வேறு எவற்றோடும் இணைசொல்ல முடியாத விந்தைகளாகும். இங்கு வீசும் தென்றலில் தேன்மணம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

பகைவரை வென்றதைப் பாடுவது **பரணி** இலக்கியம். அத்தோடு இசைப்பாடலான **பரிபாடலும் கலம்பக நூல்களும் எட்டுத்தொகையும்** வான்புகழ் கொண்ட **திருக்குறளும்** அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட **சங்க இலக்கியங்களும்** எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடப்புகழ் பெற்றான் **வள்ளல் வேள்பாரி.** புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் **குமண வள்ளல்.** இவர்கள்போல் புகழ் பெற்று வாழ்ந்த வள்ளல்களின் வரலாறு ஒன்றிரண்டல்ல பலவாகும்.

- உடுமலை நாராயணகவி

## நூல்வெளி



**நூல்வெளி**



பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் உடுமலை நாராயணகவி. இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ் பெற்றவர். தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர். நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர். இவரது பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| ஒப்புமை - இணை | முகில் - மேகம் |
| அற்புதம் - விந்தை, வியப்பு | உபகாரி - வள்ளல் |

## கற்பவை கற்றபின்

1. **தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**
   - நீண்ட நாள் வாழக்கூடிய அரிய நெல்லிக்கனி ஒன்று அதியமான் ஔவைக்குக் கொடுத்து உதவியவன்.
   - சீறாப்புராணம் இயற்றுவதற்கு சீதக்காதியும் அபுல்காசிம் மரைக்காயரும் உதவினார்கள்.
   - கம்பராமாயணம் எழுதுவதற்கு சடையப்ப வள்ளல் அவர்கள்உதவினார்.
   - அகநானூறு தொகுப்பதற்காக பாண்டியன் உக்கிரப் பெருவழுதி உதவினார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



- நற்றிணையைத் தொகுப்பதற்காக பன்னாடு தந்த மாறன் வழுதி உதவினார்.

**2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு நூல்கள், மேல்கணக்கு நூல்கள், சிற்றிலக்கியம், பெருங்காப்பியம், சிறுங்காப்பியம், அற இலக்கியம், புதுக்கவிதை, புதினம், சிறுகதை, நாட்டுப்புற இலக்கியம்.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் __________
   அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி
2. வானில் __________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
   அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்
3. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________
   அ) இரண்டு+ டல்ல ஆ) இரண் + அல்ல இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல
4. 'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது__________
   அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும் இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும்
5. ஒப்புமை+ இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________
   அ) ஒப்புமைஇல்லாத ஆ) ஒப்பில்லாத இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத

**விடை:**

1. (இ) பரணி
2. (ஆ) முகில்
3. (ஈ) இரண்டு + அல்ல
4. (அ) தந்து + உதவும்
5. (இ) ஒப்புமையில்லாத

### ★ குறுவினா ★

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- தமிழ்நாட்டில் வீசுகின்ற தென்றலில் தேன் மணம் கமழும் சுவைமிகுந்த பழங்களும் தங்கம் போன்ற தானியக் கதிர்களும் விளையும்.
- தமிழ்நாட்டின் நன்செய் நில வளம் ஒன்று அல்ல இரண்டு அல்ல பலவாகும்.

**2. "ஒன்றல்ல இரண்டல்ல"- பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

- முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் வேள்பாரி
- புலவரின் சொல்லுக்குத் தன் தலையையே தரத் துணிந்தவன் குமண வள்ளல்.

### ★ சிறுவினா ★

**1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியமாகும்.
- வான்புகழ் கொண்ட திருக்குறள்.
- இசையுடன் பாடக்கூடிய பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத்தொகை நூல்கள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



- மெய்ப்பொருளை உணர்த்தக்கூடிய அகம், புறம் பற்றிய சங்க இலக்கியங்கள் ஆகியன தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கியங்களாகும்.

## ★ சிந்தனை வினா ★

**1. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**

- சங்க காலத்தில் தமிழ் இலக்கியங்கள் சிறப்பாக இருந்தன.
- சங்க காலத்தின் இறுதிப்பகுதி ஆடம்பரமும் ஆரவாரமும் மிக்கதாக இருந்தது.
- கலை என்ற பெயரில் ஒழுக்கக் கேடுகள் தலைதூக்கின.
- தமிழகத்தின் அக, புற ஒழுக்கங்கள் பாதுகாக்கப்படாமல் இருந்தன.
- இச்சூழலில் நீதியும் கருத்து ஆழமும் தேவைப்பட்டதால் தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம்----------------
   **விடை:** பரணி
2. முல்லைக்குத் தேர்தந்த வள்ளல்--------------------------
   **விடை:** பாரி
2. வான்புகழ் கொண்ட நூல்-------------------------
   **விடை :** திருக்குறள்
3. தமிழுக்காக தன் தலையையே தரத் துணிந்தவன்-----------------
   **விடை:** குமணவள்ளல்
4. பகுத்தறிவுக் கவிராயர் எனப் புகழப்படுபவர்----------------
   **விடை:** உடுமலை நாராயணகவி
5. இசைப்பாடல் இலக்கியம்-------------------
   **விடை:** பரிபாடல்
6. "ஒன்றல்ல இரண்டல்ல" பாடலின் ஆசிரியர்----------
   **விடை:** உடுமலை நாராயணகவி
7. தமிழக மன்னர்களும் வள்ளல்களும்------------------ மிக்கவர்களாக விளங்கினர்.
   **விடை:** கொடைத்திறன்
8. தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளை பரப்பியவர்---------------------
   **விடை:** உடுமலை நாராயணகவி

### குறுவினா

**1. எங்கு தேன் மணம் கமழும்?**

தமிழகத்தில் வீசும் தென்றல் காற்றில் தேன் மணம் கமழும்.

**2. நன்செய் நிலப்பயிர்கள் யாவை ?**

நெல், வாழை, கரும்பு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



**3. நன்செய் நிலம் என்றால் என்ன?**

ஆற்று நீர், குளத்து நீர், கிணற்று நீர் ஆகிய நீர்வள ஆதாரங்களைக் கொண்டு ஓர் ஆண்டுக்கு மூன்று போகங்கள் வரை வேளாண்மை செய்யும் நிலப்பகுதியை நன்செய் நிலம் என்று கூறுவர்.

---

உரைநடை உலகம்

இயல் ஒன்று

# பேச்சுமொழியும் எழுத்துமொழியும்


4L67UM

## நுழையும் முன்




தமிழ்மொழி பழமையும், புதுமையும் நிறைந்த சிறந்த மொழி. இது பேச்சுமொழி, எழுத்துமொழி என்னும் இரு கூறுகளைக் கொண்டது. இவ்விரண்டு கூறுகளுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு. வேற்றுமையும் உண்டு. பேச்சுமொழி, எழுத்துமொழி ஆகியவற்றின் நுட்பங்களை அறிவோம்.

**மனவரைபடம்**




---

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்துவழக்குத் தொடர்களை எழுதி வருக.**

(எ.கா) பேச்சுமொழி : அம்மா பசிக்கிது எனக்குச் சோறு வேணும்.

எழுத்துமொழி : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



பேச்சுமொழி : வவுறு நிறைய சாப்புடு.
எழுத்துமொழி : வயிறு நிறைய சாப்பிடு.
பேச்சுமொழி : தண்ணி கொண்டா.
எழுத்துமொழி : தண்ணீர் கொண்டுவா.
பேச்சுமொழி : நீ நேத்து வந்தியா?
எழுத்துமொழி : நீ நேற்று வந்தாயா?

2. **பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. "ஆ" என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களையும் எழுதுக.**

(எ.கா) சொல்லு -சொல்
நில்லு - நில்
வந்தியா - வந்தாயா?
சாப்ட்டியா? - சாப்பிட்டாயா? தள்ளு - தள்
போனியா? - போனாயா? செய்தியா? - செய்தாயா?

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. மொழியின் முதல் நிலை பேசுதல் --------ஆகியனவாகும்.
   (அ) படித்தல் (ஆ) கேட்டல் (இ) எழுதுதல் (ஈ) வரைதல்
   **விடை:** (ஆ) கேட்டல்
2. ஒலியின் வரிவடிவம்--------- ஆகும்.
   (அ) பேச்சு (ஆ) எழுத்து (இ) குரல் (ஈ) பாட்டு
   **விடை:** (ஆ) எழுத்து
3. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று-----------------.
   (அ) உருது (ஆ) இந்தி (இ) தெலுங்கு (ஈ) ஆங்கிலம்
   **விடை:** (இ) தெலுங்கு
4. பேச்சு மொழியை ------------வழக்கு என்றும் கூறுவர்.
   (அ) இலக்கிய (ஆ) உலக (இ) நூல் (ஈ) மொழி
   **விடை:** (ஆ) உலக

### ★ சரியா தவறா என எழுதுக ★

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது - **சரி.**
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது **- சரி.**
3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி-**தவறு.**
4. எழுத்து மொழியில் உடல் மொழிக்கு வாய்ப்பு அதிகம் - **தவறு.**
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம் **- சரி.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



## ★ ஊடகங்களை வகைப்படுத்துக ★

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்.

**எழுத்து மொழி :**

செய்தித்தாள், நூல்கள், மின்னஞ்சல்.

**பேச்சுமொழி:**

வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்.

## ★ குறுவினா ★

**1. மொழியின் இரு வடிவங்கள் யாவை ?**

பேச்சு மொழி, எழுத்து மொழி.

**2. பேச்சு மொழி என்றால் என்ன?**

- மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சு மொழியாகும்.
- பேச்சு மொழி உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்துகிறது.
- அது கருத்தை வெளிப்படுத்துவது மட்டுமே நோக்கமாகக் கொண்டது.

**3. வட்டார மொழி எனப்படுவது யாது ?**

- பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.
- மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.இவ்வாறு மாறுபடுகின்ற ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்று கூறுகிறோம்.

**சான்றாக:**

இருக்கிறது என்ற சொல்லை இருக்குது என்று கூறுவதாகும்.

## ★ சிறுவினா ★

**பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் நான்கினை கூறுக.**

**பேச்சு மொழி:**

- உலக வழக்கு மொழி.
- உணர்ச்சிக் கூறுகள் அதிகமாக கொண்டிருக்கும்.
- சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும்.
- மக்களின் மனநிலைக்கு ஏற்ப அமைவதால் விரைந்து மாற்றமடைந்து வருகிறது.
- பேச்சு மொழியில்சிந்திப்பதற்கான நேரங்கள் குறைவு.திருத்திக் கொள்ளும் வாய்ப்பும் இல்லை. ஆகையால், பேச்சுமொழி திருத்தமான இலக்கிய நடையில் அமைவதில்லை.

**எழுத்து மொழி:**

- இது இலக்கிய வழக்கு மொழியாகும்.
- சொற்கள் முழுமையாக எழுதப்படும்.
- உணர்ச்சிக் கூறுகள் மிகக் குறைவு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



- எழுத்து மொழி பெரும்பாலும் மாறுவதில்லை. எழுத்துமொழி சிந்தித்து எழுதப்படுவதாலும் பிழைகள் ஏற்பட்டால் திருத்திக்கொள்ள வாய்ப்பு இருப்பதாலும் திருத்தமான மொழிநடையில் அமைக்கலாம்.

**2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

- ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்வதும் உண்டு.
- மக்கள் வாழும் இடத்தின் நில அமைப்பிற்கு ஏற்பவும் இயற்கையின் தடைகளுக்கு ஏற்பவும் அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படும்.
- அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறைகின்ற பொழுது இம்மாற்றங்கள் அதிகமாக புதிய மொழியாகத் பிரியும்.
- அவ்வாறு உருவாகும் புதிய மொழியைக் கிளைமொழி என்பர்.
- கன்னடம் ,தெலுங்கு, மலையாளம் முதலியன திராவிட மொழிகள். இது தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.

## ★ சிந்தனை வினா ★

**இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

- இலக்கியம் ஒரு காலக் கண்ணாடி ஆகும். * இலக்கியங்கள் மனித நாகரீகம் மற்றும் பண்பாட்டின் பிரதிபலிப்பாகும்.
- அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு உறுதிப் பொருள்களை வலியுறுத்துகின்றன.
- இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் மக்களின் பயன்பாட்டுக்கு உதவுகின்றது.
- இலக்கியங்கள் நல்ல அறிவுரைக் கருத்துக்களை மக்களுக்கு வழங்குகிறது.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. தனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டதே ------- ஆகும்.
   **விடை:** மொழி
2. வாயினால் பேசப்பட்டு பிறரால் கேட்டு உணரப்படுவது --------------------.
   **விடை:** பேச்சு மொழியாகும்
3. கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது ---------------
   **விடை:** எழுத்துமொழியாகும்
4. எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் மொழியின் -------------.
   **விடை:** இரண்டாம் நிலை
5. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது --------------.
   **விடை :** பேச்சுமொழி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



5. "கவனி" எனும் சொல் ---------------- என்னும் பொருளைத் தருகிறது.
   **விடை:** பேணுதல்
6. சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் --------- வேறுபடும்.
   **விடை :** பொருள்
7. பேச்சு மொழிக்கு நாம் தந்த வரி வடிவமே ------------------- மொழியாகும்.
   **விடை:** எழுத்து
8. பேச்சு மொழியை ----------- என்றும், எழுத்து மொழியை --------- என்றும் கூறுவர்.
   **விடை:** உலக வழக்கு, இலக்கிய வழக்கு

## குறுவினா

**1. இரட்டை வழக்கு மொழி என்றால் என்ன?**

பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அதை இரட்டை வழக்கு மொழி என்று கூறுவர்.

**2. தொல்காப்பியர் எவற்றை உலக வழக்கு செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்?**

தமிழில் பழங்காலம் முதலே பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு இருந்துள்ளது என்று தொல்காப்பியர் கூறியுள்ளார் .

**3. ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்கு எவை தேவைப்படுகின்றன?**

ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழியும் காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்துமொழியும் தேவைப்படுகின்றன.

**4. இரட்டை வழக்கு மொழிகள் எவை?**

பேச்சுமொழி, எழுத்துமொழி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் ஒன்று

விரிவானம்

# சொலவடைகள்

(பொம்மலாட்டம்)

5A7KTE

## மனவரைபடம்

சொலவடைகள்

- அதிர அடிச்சா உதிர விளையும்
- பாடிப்பாடிக் குத்தினாலும் பதரு அரிசி ஆகுமா?
- காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத்தான் தெரியும்
- அமாவாசை இருட்டில் பெருச்சாளிக்குப் போன இடமெல்லாம் வழிதான்
- அதை விட்டாலும் கதி இல்ல, அப்பால போனாலும் விதி இல்ல
- ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும்
- சொப்பணத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா?

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.**

- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- பதறாத காரியம் சிதறாது.
- அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
- ஆழம் அறியாமல் காலை விடாதே.
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
- குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



- வீட்டைக் கட்டிப்பார் கல்யாணம் பண்ணிப்பார்.

**2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

(எ.கா)

1. "அணை உடைந்து போன வெள்ளம் அழுதாலும் வராது" என்பது போல நாம் சரியாகப் படிக்கவில்லை என்றால் வாழ்க்கையில் முன்னேற முடியாது.
2. மாணவர்களிடம் ஆசிரியர்,"எறும்பு ஊறக் கல்லும் தேயும்" என்பது போல தீய பழக்கங்களின் கொடுமையைக் கூறி மனமாற்றம் அடையச் செய்வார்.
3. "அதிர அடிச்சா உதிர விளையும்" என்பது போல முயற்சி செய்தால் முன்னேற முடியும்.
4. "பாடிப்பாடிக் குத்தினாலும் பதரு அரிசி ஆகுமா?"
5. "தீயவன் கோடி ரூபாயை கோவில் உண்டியலில் போடுவது புண்ணியம் கிடைக்குமா?"
6. "உழைக்கின்ற மாடு தான் ஊருக்குள்ள விலைபோகும்" என்பது போல படித்தால் தான் சமுதாயத்தில் அனைவரும் மதிப்பர்.

## ★ மதிப்பீடு ★

**பாடப்பகுதி பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

கல்வியின் அவசியத்தை உணர்த்துகின்ற பொம்மலாட்டம் என்ற சிறுகதையை கதை வடிவில் பின்வருமாறு காணலாம்.

அம்மா, அப்பா, பையன் என்று சிறு குடும்பம் ஒன்று உள்ளது. அக்குடும்பத்தில் உள்ள பையன் ஒழுங்காக பள்ளிக்கூடம் செல்லாமல் ஊர் சுற்றிக் கொண்டே இருப்பான். அறிவுரை கூறினாலும் கேட்காத பிடிவாத குணம் கொண்டவன். அவனது பிடிவாதத்தை யாராலும் மாற்ற முடியாது. ஒரு நாள் அவன் அப்பா அந்த பையனிடம் இப்பொழுது நீ படிக்கவில்லை என்றால் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. எனவே, பள்ளிக்கூடம் போய்ப் படி என்றார். அவனது அம்மாவும் படிக்கவில்லை என்றால் யாரும் உன்னை மதிக்க மாட்டார்கள் என்றார். அவன் வேண்டா வெறுப்பாக பள்ளிக்கூடம் சென்றான்.

வழக்கம்போலவேபள்ளிக்கூடத்தை விட்டு ஓட்டம் பிடிக்கிறான். விளையாட யாராவது வருவார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது எறும்பு ஒன்று வந்தது அதனை விளையாடக் கூப்பிட்டான். ஆனால், அது தன் குழந்தைகளுக்குத் தீனி கொடுக்க வேண்டும். அரிசி, தவிடு சேகரிக்க வேண்டும் உனக்கு தான் வேலை இல்லை என்றது. பிறகு தேனீ, பொதி மாடு, ஆமை, முயல் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக விளையாடக் கூப்பிட்டான். அவனுக்கு புத்தி புகட்டும் வண்ணம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அவைகள் எல்லாம் விளையாட மறுத்து விட்டன. ஈரமான குட்டி சுவர் மீது அவன் அமர்ந்திருந்தான் சுவர் இடிந்து விழுந்து.அங்கு இருந்த பூச்சி, எறும்பு, வண்டு முதலியன உனக்குத்தான் வேலை இல்லை நாங்கள் சேர்த்த பொருளை எல்லாம் உடைத்து விட்டாயே என்று சொல்லி அவனை கோபமாகக் கூறின. மனம் மாறிய பையன் தன் அம்மாவிடம் உலகத்தில் இரும்பு கூட சும்மா இல்லாமல் வேலை செய்கின்றன. படிப்பது தான் என் வேலை என்பதை புரிந்து கொண்டேன் அம்மா. இனி ஒழுங்காக பள்ளிக்குச் செல்கிறேன் என்றான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



இக்கதை மூலம் ஒவ்வொரு மாணவரும் படிப்பது மட்டும் தான் நம் வேலை என்பதை உணர்ந்து ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை உண்டு என்பதை அறிய முடிகிறது. நாம் என்றும் கல்வியை நன்றாகப் படித்தால் நம் வாழ்வில் மேலும் மேலும் வெற்றி அடையலாம் என்பதை அறியமுடிகிறது. நம்முடைய வாழ்க்கையின் படி, முதல்படி - அதுவே நம் வாழ்க்கையின் சிறந்த படி(கல்வி) என்று உணர வேண்டும்.

கற்கண்டு

இயல் ஒன்று

# குற்றியலுகரம், குற்றியலிகரம்

6AZQYA

## மனவரைபடம்

குற்றியலுகரம்
- நெடில் தொடர் - ஆடு
- உயிர்த் தொடர் - வரகு
- வன் தொடர் - மக்கு
- மென் தொடர் - சங்கு
- இடைத்தொடர் - மார்பு
- ஆய்தத் தொடர் - எ.்.கு

## கற்பவை கற்றபின்

**1. ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்ணுப் பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள். அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.**

**எண்ணுப்பெயர்கள்:**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து.

**குற்றியலுகரச் சொற்கள்:**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது, பத்து.

**2. குற்றியலுகர எண்ணுப் பெயர்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ----- மென்தொடர்க் குற்றியலுகரம்.

ஆறு, ஏழு -- நெடில் தொடர்க் குற்றியலுகரம்

எட்டு, பத்து -- வன் தொடர்க் குற்றியலுகரம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in



ஒன்பது -- உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

**3. குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்.**

(எ.கா) ஒன்று-1+1/2+1/2=2

இரண்டு-1+1+1/2+1/2=3

மூன்று-2+1/2+1/2=3

நான்கு-2+1/2+1/2=3

ஐந்து-2+1/2+1/2=3

ஆறு-2+1/2=21/2

எட்டு-1+1/2+1/2=2

ஒன்பது-1+1/2+1+1/2=3

பத்து-1+1/2+1/2=2

**4. கு, சு, டு, து, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.**

பாகு, பாடு, ஓடு, விடு, காசு, வீசு, கேது, சாது, மாது, வாது,

வறு, சேறு, செறு,

வது, வடு, பொது.

## ★ மதிப்பீடு ★

**கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து.

| | | |
|---|---|---|
| **நெடில் தொடர்** | : | ஆறு, ஏடு, காசு |
| **ஆய்தத் தொடர்** | : | எஃகு |
| **உயிர் தொடர்** | : | விறகு |
| **வன்தொடர்** | : | எட்டு, உழக்கு |
| **மென்தொடர்** | : | கரும்பு, பந்து |
| **இடைத்தொடர்** | : | கொய்து |

## ★ பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக ★

| | | **விடை** |
|---|---|---|
| 1. பசு,விடு,ஆறு, கரு | - | கரு |
| 2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து | - | பஞ்சு. |
| 3. ஆறு, மாசு, பாகு, அது | - | அது. |
| 4. அரசு, எய்து, மூழ்கு, மார்பு | - | அரசு. |
| 5. பண்பு,மஞ்சு,கண்டு, எஃகு | - | எஃகு. |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



## ★ குறுவினா ★

**1. குற்றியலுகரம் என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

- குற்றியலுகரம் = குறுமை + இயல் + உகரம்.
- தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும். அதாவது, ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. குற்றியலுகரம் ------------ வகைப்படும்.
   **விடை:** 6
2. குற்றியலிகரம் ------------ இடங்களில் மட்டும் வரும்.
   **விடை:** 2
3. குறில் எழுத்துகளை குறிக்க பயன்படுத்தும் அசைச்சொல் ------------.
   **விடை :** கரம்
4. சார்பெழுத்துக்கள் ------------- வகைப்படும்.
   **விடை:** 10

### குறுவினா

**1. முதல் எழுத்துக்கள் என்பது யாது?**

- உயிர் பன்னிரண்டு
- மெய் பதினெட்டு

ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் எனப்படும்.

**2. குற்றியலுகரம் என்றால் என்ன?**

தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம், தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும்.

**3. முற்றியலுகரம் என்பது யாது?**

தனக்குரிய எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும் இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்றும் கூறுவர்.

**4. தமிழ் எழுத்துகளை குறிப்பிடுவதற்கு எந்தெந்த அசைச் சொற்களைப் பயன்படுத்துகிறோம்?**

கரம், கான், காரம் கேனம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in



## மொழியை ஆள்வோம்

### கேட்க

**1. தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்க.**

தாய் வாழ்க தாய் தந்த தமிழ் வாழ்க மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களேஇங்கு கூடியிருக்கும் சான்றோர்களே பெரியோர்களே மாணவக் கண்மணிகளே அனைவருக்கும் என் முத்தான முத்தமிழ் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தமிழின் சிறப்பு என்னும் தலைப்பில் தொன்மைத் தமிழின் மாண்புகளையும் தனிச்சிறப்புகளையும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

தமிழ் இலக்கிய இலக்கண வளம் கொண்ட மொழியாகத் திகழ்ந்து வருகிறது. தமிழின் தொன்மையை ஆராய்ந்து கண்டறிந்த மொழி தமிழ் மொழி ஆகும். சங்கங்கள் அமைத்து மொழியை வளர்த்தவனும் தமிழன்தான்.

தமிழர்கள் முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் எனப் பகுத்து தமிழை வளர்த்திருக்கிறார்கள். முதல்சங்கத்தில் தோன்றிய அகத்தியமும்

இடைச் சங்கத்தில் தோன்றிய தொல்காப்பியமும் கடைச்சங்கத்தில் தோன்றிய திருக்குறள், குறுந்தொகையும் சிறந்த நூலாகக் கொள்ளப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள் அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பிரித்து புலவர்களால் பாடப்பட்டிருக்கின்றன. மன்னராட்சி முறை வீரம், புலமை போன்றவை புறப்பாடல்களில் வெளிப்படுவதை உணரலாம். களவு,கற்பு வாழ்க்கை பற்றி அகப்பாடலில் நாம் உணரலாம். இத்தகைய பிரிவுகளைக் கொண்டு வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல சிந்தனைகளையும் வழிகாட்டுதலையும் தமிழர்கள் சங்க இலக்கியம் தொடங்கி இன்றுவரை நிலைநிறுத்தி வருகிறார்கள். எனவே, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் மாதவம் செய்திருக்க வேண்டும். தமிழ் மொழியின் மற்றொரு சிறப்பு பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழுக்கு அரணாக இருந்து தமிழ்மொழியின் கட்டுக்கோப்பை சிதைக்காமல் கட்டிக்காத்து வருவது இலக்கணத்தின் தன்மையாகும். எழுத்து, சொல், தொடர் போன்ற சீரான முறையில் இலக்கணப் பகுப்புகள் செய்து கொடுத்தமை தமிழ் இலக்கண நூலின் தனிச் சிறப்பாகும். அன்றும் இன்றும் என்றும் மாறாத தன்மையுடையதாக கோட்பாடுகள் விளங்கி வருவது நம் மொழியின் தெளிவை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

பிற மொழிகளைக் காட்டிலும் நம் தமிழ்மொழி கற்பதற்கு எளிமையானதாக இருக்கிறது.மொழியைத் தெளிவாக விரைவாக கற்றுக் கொள்ள தமிழ் மொழி பெரும் துணையாக இருக்கிறது. இலக்கியமும் இலக்கணமும் காலத்தை வென்று பல்வேறு நூற்றாண்டுகள் கடந்து இன்று இனிமை குறையாமல் கற்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழ் சிறப்பினை வார்த்தைகளால் சொல்ல இயலாது. இதனையே கவிஞர் ராமலிங்கனார் 'தமிழன் என்றொரு இனமுண்டு அவனுக்குத் தனி ஒரு குணம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



உண்டு' என்றார். தங்களிடம் இருந்து தற்காலிகமாக விடை பெறுகிறேன். பழமையும் இனிமையும் கொண்டிருக்கும் தமிழை நாளும் கற்று பார் போற்றும் இனமாகத் திகழ்வோம் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி பாராட்டி "சாவிலும் தமிழ் படித்து சாக வேண்டும் என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" என்று கூறி விடைபெறுகிறேன். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்! நன்றி வணக்கம்.

**2. கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**நான் அறிந்த பழமொழிகள்**

- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- ஆழம் தெரியாமல் காலை விடாதே.
- ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.
- காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
- தர்மம் தலைகாக்கும்.
- பதறாத காரியம் சிதறாது.
- வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
- ஆடையில்லா மனிதன் அரை மனிதன்.
- கெடுவான் கேடு நினைப்பான்.
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?.

## சொல்லைக் கேட்டு எழுதுக

1. நமது தாய்மொழி தமிழாகும்.
2. தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை மிக்கது.
3. தமிழுக்குத் தலைகொடுத்தவன் குமணவள்ளல்
4. தமிழ்மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என்னும் இரண்டு கூறுகளை உடையது.
5. பேச்சு மொழியை உலகவழக்கு என்றும் கூறுவர்.

## கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தர வேண்டிய சொற்களை எடுத்து எழுதுக

கோதை கவிதையைப் படித்தாள்

| வினா | அழுத்தம் தர வேண்டிய சொல் |
|---|---|
| கோதை எதைப் படித்தாள்? | |
| கவிதையைப் படித்தது யார்? | |
| கோதை கவிதையை என்ன செய்தாள்? | |

**அழுத்தம் தர வேண்டிய சொல்**

கவிதை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



கோதை

படித்தாள்

## அறிந்து பயன்படுத்துவோம்

திணை இரண்டு வகைப்படும். அவை 1. உயர்திணை 2. அ.்.றிணை


ஆறு அறிவுடைய மனிதர்களை உயர்திணை என்பர்.

பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருள்களை அ.்.றிணை என்பர்.

**படத்திற்கு பொருத்தமான திணையை எழுதுக.**



புலவர் - உயர்திணை



பசு - அஃறிணை



பூக்காரி - உயர்திணை

## கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக

வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்.

**உயர்திணை:** முகிலன், கயல்விழி, தலைவி, ஆசிரியர், சுரதா.

**அஃறிணை :** வயல், குதிரை, கடல், புத்தகம், மரம்.

## கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக

**தமிழ் மொழிப் பற்று**

முன்னுரை -மொழி பற்றிய விளக்கம்- தாய்மொழி- தாய்மொழிப் பற்று- தாய்மொழிப் பற்று கொண்ட சான்றோர்- சாதுவன் வரலாறு -நமது கடமை- முடிவுரை.

**தாய்மொழிப் பற்று**

**குறிப்புச் சட்டகம்:**

- முன்னுரை
- மொழி பற்றிய விளக்கம்
- தாய்மொழி
- தாய்மொழிப் பற்று
- தாய்மொழிப் பற்று கொண்ட சான்றோர்
- சாதுவன் வரலாறு
- நமது கடமை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



- முடிவுரை

**முன்னுரை :**

மொழியே நமது இரு கண்கள் ஆகும். தமக்குத் தோன்றிய எண்ணங்களை பிறருக்கு வெளிப்படுத்த மனிதர்கள் கண்டுபிடித்த கருவியே மொழியாகும். மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் நாகரீக உயர்வுக்கும் அடிப்படையாக அமைவது மொழியே.

**மொழி பற்றிய விளக்கம்:**

முதலில் மனிதர்கள் தம் எண்ணங்களை உடல் அசைவு, சைகைகள், ஓவியங்கள் என பலவித வழிகள் மூலமாக ஓரளவே தம் எண்ணங்களை வெளிப்படுத்தினார்கள். சைகை யோடு சேர்ந்த ஒலியே காலப்போக்கில் மொழியாக வளர்ந்தது, மனித இனம் வாழ்ந்த இட அமைப்பும் இயற்கை அமைப்பும் பழமொழிகள் உருவாவதற்கு வழி செய்தன.

**தாய்மொழி:**

தாய் மொழியே நம் தாய்க்குச் சமம் ஆகும்.

தாய் தன் குழந்தைக்கு முதன் முதலில் சொல்லித்தரும் மொழியே தாய்மொழி ஆகும். தாய்மொழியே குழந்தைகளுக்கு இயல்பாக வரும். தாய்மொழியே பேசவும் கேட்கவும் இனிய எளிய மொழியாக அமைகின்றது.

**தாய்மொழிப்பற்று:**

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போல ஒருவர் பல மொழிகளை அறிந்திருந்தாலும் அவரது அடிமனதில் தாய்மொழியே ஆழமாக வேரு கொண்டிருக்கும். ஒருவர் தாய்மொழி வழியே தனது கருத்தை எளிதாக வெளிப்படுத்துவதால் அம்மொழியின் மீது அவர்களுக்கு உள்ள அன்பு தாய்மொழிப் பற்றே எனக் கூறலாம்.

**தாய்மொழிப் பற்று கொண்ட சான்றோர்கள்:**

தாய்மொழிக் கல்வியே சிறப்பையும் தெளிவையும் தருகின்றது. தாய்மொழிவழிக் கல்வி கற்பது குழந்தை, தாய்ப்பால் குடித்து வளர்வது போன்றதாகும். தாய்மொழி வழியாகவே இயற்கை வாழ்வு நடத்த முடியும். அதன் மூலமே பண்பாட்டையும் வளர்க்க முடியும் என்று காந்தியடிகள் கண்ட உண்மையை இங்கு நினைவு கூறலாம். "வீறுடை செம்மொழி நம் தமிழ் மொழி" உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர் மொழியாகவும் விளங்குகின்றது என்று தமிழின் பெருமையை பாவலரேறு பறைசாற்றுகின்றன. குழந்தையின் அறிவும் மனமும் திறமும் வளரத் தாய்மொழிவழிக் கல்வியே சிறந்தது என்பதை உளவியலாளர் உறுதி கொள்கிறார்.

**சாதுவன் வரலாறு:**

மணிமேகலை காப்பியத்தில் ஆதிரையின் கணவன் சாதுவன். அவன் ஒருமுறை பொருளீட்ட கடற் பயணம் மேற்கொண்டான். அப்பொழுது புயல் காற்றால் அவனுடைய படகு உடைந்து ஒரு மரத்துண்டை பற்றிக்கொண்டு நாகர்கள் வாழும் மலைப் பக்கத்தில் போய் சேர்ந்தான். அங்கு அவர்கள் மனிதர்களைக் கொன்று தின்று விடுவார்கள். சாதுவன் பல மொழிகள் பேசுபவன் என்பதால்,அவர்கள் பேசும் மொழியாகிய நாகர் மொழியைப் பேசி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



உயிர்பிழைத்தான். ஆகையால்" அவரவர் தாய்மொழியே மேன்மை தரும் என்பதை இதன் மூலம் நாம் உணரலாம்.

**நமதுகடமை:**

சிறந்த சான்றோர்கள், அறிவியல் அறிஞர்கள், எழுத்தாளர்கள் பலரும் தம் தாய் மொழியிலேயே தமது கருத்துகளை வெளியிட்டு சிறப்பு பெறுகின்றனர். தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை தாய்மொழிவழிக் கல்வி கற்பதே சிறந்ததாகும். ஆகையால், தாய்மொழியின் சிறப்பை நன்கு உணர்ந்து அம்மொழியை நாம் கடைபிடிப்போம். இதுவே, நமது கடமையாகவும் அமைய வேண்டும்.

**முடிவுரை:**

உலக நாடுகள் அனைத்தும் அவரவர் தாய் மொழியிலேயே சிறந்த அறிவு பெற்று, புகழும் பெருமையும் அடைகின்றனர். ஆகையால், நாமும் நம் தாய்மொழியாகிய தமிழை என்றும் போற்றுவோம். புகழ் அடைவோம். வெற்றியும் பெறுவோம்.

## மொழியோடு விளையாடு

### தொகைச் சொற்களை விரித்து எழுதுக

(எ.கா)

இருதிணை : உயர்திணை, அஃறிணை
முக்கனி : மா, பலா, வாழை.
முத்தமிழ் : இயல்தமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ்
நாற்றிசை : வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு.
ஐவகை நிலம் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
அறுசுவை : இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு

**கட்டங்களிலுள்ள எழுத்துகளை மாற்றி, மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதினால் ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக.**

(எ.கா)

| | | |
|---|---|---|
| கை | எ | து |
| ற | து | வி |
| னை | கை | வி |

→

| | | |
|---|---|---|
| எ | து | கை |
| து | ற | வி |
| கை | வி | னை |

| | | |
|---|---|---|
| கு | ம | த |
| ந் | தி | த |
| ரை | கு | தி |

→

| | | |
|---|---|---|
| ம | த | கு |
| த | ந் | தி |
| கு | தி | ரை |

### இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக

(எ.கா) அரசுக்குத் தவறாமல் **வரி** செலுத்த வேண்டும்.
ஏட்டில் எழுதுவது **வரி** வடிவம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in


1. மழலை பேசும் **மொழி** அழகு.
   இனிமைத் தமிழ் **மொழி** எமது.
2. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை **நடை** பழகும்.
   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்கு மொழி **நடை**.
3. நீ அறிந்ததைப் பிறருக்குச் **சொல்**
   எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொல்**.
4. உழவர்கள் நாற்று **நட** வயலுக்குச் செல்வர்.
   குழந்தையை மெதுவாக **நட** என்போம்.
5. நீதி மன்றத்தில் தொடுப்பது **வழக்கு**.
   'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு **வழக்கு**.

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள்...**

1. கடிதங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதும்போது திருத்தமான மொழி நடையையே கையாள்வேன்.
2. பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற நாட்டுப்புறக் கலைகளைப் போற்றுவேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| ஊடகம் | - Media | பருவ இதழ் | - Magazine |
| மொழியியல் | - Linguistics | பொம்மலாட்டம் | - Puperry |
| ஒலியியல் | - Phonology | எழுத்திலக்கணம் | - Orthography |
| இதழியல் | - Journalism | உரையாடல் | - Dialogue |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612539 www.CBSEtips.in



# இயல் 1
## கவிதைப் பேழை (1, 2)
### அலகுத்தேர்வு

**மொத்த மதிப்பெண்கள் 25**

**I. நிரப்புக:** **5 x 1 = 5**

1. வானில் _______ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
2. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் _______
3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______
4. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழ்ப்படுபவர் _______
5. எங்கள் தமிழ்மொழி _______ போன்ற மொழியாகும்.

**II. நயம் அறிந்து எழுதுக.** **(1)**

6. கொல்லா விரதம் குறியாகக்
   கொள்கை பொய்யா நெறியாக.

**III. பொருத்துக** **4 x 1 = 4**

7. நெறி - (அ) மேகம்
8. விரதம் - (ஆ) வள்ளல்
9. முகில் - (இ) வழி
10. உபகாரி - (ஈ) நோன்பு

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **1 x 6 = 6**

11. அருள் நெறி.... எனத் தொடங்கும் "எங்கள் தமிழ்" பாடலை எழுதுக.

**V. குறுவினா** **2 x 2 = 4**

12. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
13. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

**VI. சிறுவினா** **1 x 5 = 5**

14. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



# இயல் 1
## உரைநடை உலகம், விரிவானம்
### அலகுத்தேர்வு - 2

**மொத்த மதிப்பெண்கள் 25**

**I. நிரப்புக:** **7 x 1 = 7**

1. தமிழின் _______ ஒன்று தெலுங்கு.
2. மொழியின் முதல்நிலை பேசுதல் _______ ஆகியனவாகும்.
3. பேச்சு மொழிக்கு நாம் தந்த வரிவடிவமே _______ மொழியாகும்.
4. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது _______ ஆகும்.
5. வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது _______
6. ஒலியின் வரிவடிவம் _______ ஆகும்.
7. கவனி என்னும் சொல் _______ என்னும் பொருளைத் தருகிறது.

**II. சரியா தவறா** **2 x 1 = 2**

8. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது.
9. எழுத்து மொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம்.

**III. வகைப்படுத்துக** **1 x 2 = 2**

10. பேச்சு மொழியை எழுதுக: நூல்கள், திரைப்படம், வானொலி, மின்னஞ்சல், தொலைக்காட்சி

**IV. குறுவினா** **2 x 2 = 4**

11. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
12. வட்டாரமொழி எனப்படுவது யாது?

**V. சிறுவினா** **1 x 5 = 5**

13. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

**VI. விடையளி** **1 x 5 = 5**

14. பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



# இயல் 1
## கற்கண்டு, மொழி ஆள்வோம், மொழியோடு விளையாடு
### அலகுத்தேர்வு - 3

**மொத்த மதிப்பெண்கள் 25**

**I. நிரப்புக:** **5 x 1 = 5**

1. சார்பெழுத்துகள் _______ வகைப்படும்.
2. குறில் எழுத்துகளைக் குறிக்க _______ அசைச்சொல்லைப் பயன்படுத்துகிறோம்.
3. குற்றியலுகரம் _______ வகைப்படும்.
4. கொக்கு + யாது = _______
5. ‘ஒன்று’ என்ற குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் மாத்திரை அளவு _______

**II. குறுவினா** **4 x 2 = 8**

6. குற்றியலுகரம் என்றால் என்ன?
7. ‘குற்றிலுகரம்’ என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.
8. முதல் எழுத்துகள் என்பது யாது?
9. குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்கள் நான்கனை எழுதுக.

**III. மொழிப்பயிற்சி** **5 x 1 = 5**

10. பொருந்தாத சொல்லை எழுதுக: ஆறு, மாசு, பாகு, அது.
11. உயர்திணைச் சொற்களை எழுதுக: தலைவி, கடல், மரம், முகிலன்
12. தொகைச் சொற்களை விரித்து எழுதுக: முத்தமிழ்
13. கலைச்சொல் அறிக: Journalism, Puppertry
14. இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.
    மழலை பேசும் _______ அழகு
    இனிமைத் தமிழ் _______ எமது

**IV. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:**

முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப்பற்று - தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் - சாதுவன் வரலாறு - நமது கடமை - முடிவுரை.




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



இயல் இரண்டு

# அணிநிழல் காடு



**கற்றல் நோக்கங்கள்**

- செய்யுளின் வருணனைப் பகுதிகளைப் படித்துச் சுவைத்தல்.
- காடுகளும் காட்டு உயிர்களும் நாட்டின் உயிர்நாடிஎன்பதைப் புரிந்துகொள்ளுதல்.
- காட்டு உயிர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பைக் குறித்துப் புரிந்துகொள்ளுதல்.
- நேர்காணல் வடிவத்தில் அளிக்கப்பட்ட கருத்துகளைப் படித்துணரும் திறன் பெறுதல்.
- எழுத்துகள் குறுகி ஒலிக்கும் இடங்களை அறிந்து பயன்படுத்துதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# இயல் இரண்டு

கவிதைப்பேழை

## காடு

7ZUA2X



### நுழையும் முன்




காடும் கடலும் நமக்கு எப்போதும் காட்சிக்கு இன்பம் தருபவை. ஒரு நாட்டின் வளம், அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள காடுகளின் அளவைப் பொருத்தே மதிப்பிடப்படுகிறது. அதனால்தான் 'காட்டின் வளமே நாட்டின் வளம் ' என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.காட்டையும் காட்டின் குளிர்ச்சியையும் காட்டு விலங்குகளின் கொண்டாட்டாங்களையும் கவிதை வழி அறிவோம்.




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## மனவரைபடம்




காரத்திகை தீபமெனக்
காடெல்லாம் பூத்திருக்கும்
பார்த்திட வேண்டுமடீ - கிளியே
பார்வை குளிருமடீ!

காடு பொருள்கொடுக்கும்
காய்கனி ஈன்றெடுக்கும்
கூடிக் களித்திடவே - கிளியே
குளிர்ந்த நிழல்கொடுக்கும்

குரங்கு குடியிருக்கும்
கொம்பில் கனிபறிக்கும்
மரங்கள் வெயில்மறைக்கும் - கிளியே
வழியில் தடையிருக்கும்

*பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சரவ ங்கலங்கும் - கிளியே
நரியெலாம் ஊளையிடும்

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ - கிளியே
பூங்குயில் கூவுமடி!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ - கிளியே
இயற்கை விடுதியிலே!*

\- சுரதா

## பாடலின் பொருள்

கார்த்திகை விளக்குகள் போலக் காடு முழுவதும் மலர்கள் மலர்ந்திருக்கும். அவற்றைக் காணும் கண்கள் குளிர்ச்சி பெறும். காடு பல வகையான பொருள்களைத் தரும். காய்கனிகளையும் தரும். எல்லாரும் கூடி மகிந்திடக் குளிர்ந்த நிழல் தரும். அங்கே வசிக்கும் குரங்குகள் மரக்கிளைகளில் உள்ள, கனிகளைப் பறித்து உண்ணும். மரங்கள் வெயிலை மறைத்து நிழல் தரும். அடர்ந்த காடு வழிச்சொல்வோர்க்குத் தடையாய் இருக்கும்.

பச்சை நிறம் உடைய மயில்கள் நடனமாடும். பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும். அதனைக்கண்டு நஞ்சினை உடைய பாம்புகள் கலக்கமடையும். நரிக் கூட்டம் ஊளையிடும். மிகுந்த சுவையுடைய தழையை யானைகள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



தின்றபடி புதிய நடை போடும். பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவும். இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.

## நூல் வெளி

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் பாரதிதாசன் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். பாரதிதாசனின் இயற்பெயர் 'சுப்புரத்தினம்'. எனவே, தம் பெயரைச் சுப்புரத்தின தாசன் என்று மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா என்பதாகும். உவமைகளைப் பயன்படுத்திக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர் என்பதால் இவரை உவமைக் கவிஞர் என்றும் அழைப்பர். அமுதும் தேனும், தேன்மழை, துறைமுகம் உள்ளிட்ட பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

இப்பாடல் தேன்மழை என்னும் நூலில் இயற்கை எழில் என்னும் பகுதியிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

இப்பாடல் கிளிக்கண்ணி என்னும் பாவகையைச் சேர்ந்தது. கிளியின் மொழி போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணை நோக்கிக் கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் வகை ' கிளிக்கண்ணி ' ஆகும்.

## தெரிந்து கொள்வோம்

**காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள்**

கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி, புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில், அறல், பதுக்கை, கணையம்.

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| ஈன்று | - தந்து | களித்திட | - மகிழ்ந்திட |
| கொம்பு | - கிளை | நச்சரவம் | - விடமுள்ள பாம்பு |
| அதிமதுரம் | - மிகுந்த சுவை | விடுதி | - தங்கும் இடம் |

## கற்பவை கற்றபின்

1. காடு என்னும் தலைப்பில் அமைந்த 'கிளிக்கண்ணிப்' பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. பின்வரும் கிளிக்கண்ணிப் பாடலைப் பாடி மகிழ்க.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ! - கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி.
கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடீ! - கிளியே



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612399 www.CBSEtips.in



நாளில் மறப்பாரடீ.

- பாரதியார்

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. வாழை, கன்றை ____________

அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது

**[விடை : ஈன்றது]**

2. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

அ) காடு + டெல்லாம் ஆ) காடு + எல்லாம் இ) கான் + எல்லாம்

**[விடை : காடு + எல்லாம் ]**

3. 'கிழங்கு + எடுக்கும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________

அ) கிழங்கு எடுக்கும் ஆ) கிழங்கெடுக்கும் இ) கிழங்குடுக்கும் ஈ) கிழங்கொடுக்கும்

**[விடை : கிழங்கெடுக்கும் ]**

### ★ நயம் அறிக ★

**பாடலிலுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

**மோனை :**

கார்த்திகை - காடெல்லாம்
பார்த்திட - பார்வை ; காடு - காய்கனி
கூடிக் - குளிர்ந்த ; குரங்கு - குடியிருக்கும்
பச்சை - பன்றி : நச்சர - நரியெலாம்
புதுநடை - பூங்குயில் ; சிங்கம் - சிறுத்தை

**எதுகை :**

| | | | |
|---|---|---|---|
| கார்த்திகை | குரங்கு | பச்சை | சிங்கம் |
| பார்த்திட | மரங்கள் | நச்சர | எங்கும் |
| பார்வை | | | |

**இயைபு**

| | | |
|---|---|---|
| பொருள் கொடுக்கும் | குடியிருக்கும் | தின்றபடி |
| நிழல் கொடுக்கும் | கனிபறிக்கும் | கூவுமடி |
| | வெயில் மறைக்கும் | |
| | தடையிருக்கும் | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## ★ குறுவினா ★

**1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.**

✶ காட்டுப்பூக்களுக்குக் கார்த்திகை விளக்குகளை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

**2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை ?**

✶ காடுகள் பல்வகைப் பொருள்களையும் காய்கனிகளையும் தரும்.
✶ எல்லாரும் கூடி மகிழ்ந்திட குளிர்ந்த நிழல் தரும்.
✶ காட்டில் வசிக்கும் குரங்குகள் மரக்கிளைகளில் உள்ள, கனிகளைப் பறித்து உண்ணும்.
✶ மரங்கள் வெயிலை மறைத்து நிழல் தரும்.

## ★ சிறுவினா ★

**'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

✶ பச்சை நிறம் உடைய மயில்கள் நடனமாடும்.
✶ பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும். அதனைக் கண்டு நஞ்சினை உடைய பாம்புகள் கலக்கமடையும்.
✶ நரிக் கூட்டம் ஊளையிடும்.
✶ மிகுந்த சுவையுடைய தாழையை யானைகள் தின்றபடி புதிய நடைபோடும்.
✶ பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவும்.
✶ இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம் புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.
✶ தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க!
✶ வானம்வரை உள்ளடக்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

## ★ சிந்தனை வினாக்கள் ★

**காட்டை இயற்கை விடுதி என்று கவிஞர் கூறக் காரணம் என்ன ?**

✶ இயற்கையாகப் பூக்கள், பழங்கள், மரங்கள், செடிகொடிகள் அமைந்தது காடு.
✶ இக்காட்டில் பறவைகளும் விலங்குகளும் தங்குவதற்கு ஏற்ற இடமாகவும், இயற்கையாக உணவும் கிடைக்கும் இடமாகவும் அமைகின்றன.
✶ மரம், செடி, கொடிகள் முதலியனவற்றில் புழுக்கள், பூச்சிகள், பறவைகள் ஆகியன தங்குவதற்கான இடமாகவும், இயற்கையாக உணவு கிடைக்கும் இடமாகவும் அமைந்துள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. சுரதாவின் இயற்பயர் ____________. [விடை : இராசகோபாலன்]
2. பாரதிதாசனின் இயற்பெயர் ____________. [விடை : சுப்புரத்தினம்]
3. உவமைக் கவிஞர் ______________. [விடை : சுரதா]

### குறுவினா

**1. காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள் நான்கனைக் கூறுக**

அடவி, கான், ஆரணி, வனம்

**2. கிளிக்கண்ணி என்னும் பாவகை என்பது என்ன ?**

கிளியின் மொழி போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணை நோக்கிக் கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் வகை என 'கிளிக்கண்ணி ' ஆகும்.

இயல் இரண்டு

கவிதைப்பேழை


# அப்படியே நிற்கட்டும் அந்த மரம்

7KBF1L

### நுழையும் முன்

நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணிமகுடங்களே மரங்கள். அவை மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை. மரங்களைப் பற்றிய நினைவுகள் பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. கால வெள்ளத்தில் மரங்கள் மறையலாம். அவற்றைப் பற்றிய நினைவுகள் மறையா என்பதை விளக்கும் ஒன்றை அறிவோம்.

**மனவரைபடம்**






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



ஊரின் வடகோடியில் அந்த மரம்
ஐந்து வயதில் பார்த்தபோதும்
இப்படியேதானிருந்தது
ஐம்பதைத் தாண்டி இன்றும்
அப்படியேதான்

தாத்தாவின் தாத்தா காலத்தில்
நட்டு வளர்த்த மரமாம்
அப்பா சொல்லக் கேட்டிருக்கிறேன்

பச்சைக்காய்கள் நிறம் மாறிச்
செங்காய்த் தோற்றம் கொண்டதுமே
சிறுவர் மனங்களில் பரவசம் பொங்கும்

பளபளக்கும் பச்சை இலைகளுடே
கருநீலக் கோலிக்குண்டுகளாய்
நாவற்பழங்கள் கிளைகளில் தொங்கும்
பார்க்கும்போதே நாவில் நீருறும்.

காக்கை குருவி மைனா கிளிகள்
இன்னும் பெயரறியாப் பறவைகளுடன்
அணில்களும் காற்றும் உதிர்த்திடும்
சுட்ட பழங்கள் பொறுக்க
சிறுவர் கூட்டம் அலைமோதும்

வயதுவந்த அக்காக்களுக்காய்
கையில் பெட்டியுடன் ஓடிஓடிப்
பழம் பொறுக்கும் தங்கச்சிகள்

இரவில் மெல்லிய நிலவொளியில்
படையெடுத்து வரும்
பழந்தின்னி வௌவால் கூட்டம்

தோப்பு முழுக்கப் பரவிக்கிடக்கும்
மரத்தின் குளிர்ந்த நிழலிலே
கிளியாந்தட்டின் சுவாரசியம்
புளியமிளாறுடன் அப்பா வரும்வரை

நேற்று மதியம் நண்பர்களுடன்
என் மகன் விளையாடியதும்
அந்த மரத்தின் நிழலில்தானே

பெருவாழ்வு வாழ்ந்த மரம்
நேற்றிரவுப் பேய்க்காற்றில்
வேரோடு சாய்ந்துவிட்டதாமே
விடிந்தும் விடியாததுமாய்
துஷ்டி கேட்கும் பதற்றத்தில்
விரைந்து செல்கிறார் ஊர்மக்கள்
குஞ்சு குளுவான்களோடு

எனக்குப் போக மனமில்லை
என்றும் என்மன வெளியில்
அப்படியே நிற்கட்டும் அந்த மரம்
குன்றுகளின் நடுவே மாமலைபோல

\- ராஜமார்த்தாண்டன்

## நூல் வெளி

ராஜமார்த்தாண்டன் கவிஞர், இதழாளர், கவிதைத் திறனாய்வாளர் எனப் பன்முகத் திறன்கள் பெற்றவர். கொல்லிப்பாவை என்னும் சிற்றிதழை நடத்தியவர். ராஜமார்த்தாண்டன் கவிதைகள் என்னும் நூலுக்காத் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்றவர். சிறந்த தமிழ்க் கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் தலைப்பில் நூலாக்கியுள்ளார்.

## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| பரவசம் | - | மகிழ்ச்சிப் பெருக்கு |
| துஷ்டி கேட்டல் | - | துக்கம் விசாரித்தல் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள ஏதேனும் ஒரு மரம் குறித்து வருணனையாக ஐந்து தொடர்கள் எழுதுக.**

**தென்னை மரம்**

- நெடுநெடுனு வளர்ந்த மரம், நேர்த்தியான மரம்.
- சூடான உடலுக்கு குளிர்ச்சியைத் தரும் இளநீர்.
- வீட்டுச் சமையலுக்கும், எண்ணெய்யாகவும் பயன்படுகிறது தேங்காய்
- தென்னை ஓலையிலிருந்து கிடுக, பெருக்குமாறு செய்யப்படுகிறது.
- தென்னை மட்டையிலிருந்து பல்வேறு பொருள்கள் செய்யப்படுகிறது.

**2. உங்கள் பகுதியில் உள்ள மரங்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

வாழை மரம் ; தென்னை மரம் ; வேப்பமரம் ;
புளியமரம் ; முருங்கை மரம் ; பனைமரம் ;
கொய்யாமரம் ; புங்க மரம் ; வாகை மரம்.

**3. பின்வரும் புதுக்கவிதைகளைப் படித்துச் சுவைக்க.**

கொப்புகள் விலக்கி
கொத்துக் கொத்தாய்
கருவேலங்காய்
பறித்துப் போடும் மேய்ப்பனை
ஒருநாளும்
சிராய்ப்பதில்லை
கருவமுட்கள்.

குழந்தை
வரைந்தது
பறவைகளை மட்டுமே
வானம்
தானாக உருவானது.
- கலாப்ரியா

## மதிப்பீடு

**★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★**

1. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது __________.
அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்
**[விடை : கோலிக்குண்டு]**

2. ‘சுட்ட பழங்கள்’ என்று குறிப்பிடப்படுபவை __________.
அ) மண் ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள்
இ) வேகவைத்த பழங்கள் ஈ) சுடப்பட்ட பழங்கள்
**[விடை : மண் ஒட்டிய பழங்கள்]**

3. ‘பெயரறியா’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
அ) பெயர + றியா ஆ) பெயர் + ரறியா இ) பெயர் + அறியா ஈ) பெயர + அறியா
**[விடை : பெயர் + அறியா]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



4. 'மனமில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________.

அ) மன + மில்லை ஆ) மனமி + இல்லை

இ) மனம் + மில்லை ஈ) மனம் + இல்லை

**[விடை : மனம் + இல்லை]**

## ★ குறுவினா ★

**1. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது ?**

- ✷ நாவல் மரம் தாத்தாவின் தாத்தா காலத்தில் நட்டு வளர்த்த மரம் அங்கு நின்றிருந்தது.

**2. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர் ?**

காக்கை ; குருவி ; மைனா ; கிளிகள் ; அணில்கள்

## ★ சிறு வினா ★

**1. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?**

- ➢ ஊரின் வடகோடியில் உள்ள நாவல்மரம் ஐந்து வயதில் பார்த்தது போலவே ஐம்பதையும் தாண்டி அப்படியே இருக்கிறது.
- ➢ தாத்தாவின் தாத்தா காலத்தில் நட்டு வளர்த்த மரமாகும்.
- ➢ பச்சைக்காய்கள் நிறம்மாறி செங்காய்த் தோற்றம் அடைந்ததைப் பார்த்த சிறுவர்களின் மனங்களில் பரவசம் பெருகின.
- ➢ காக்கை, குருவி, மைனா, கிளிகள், அணில்கள், காற்று முதலியவை உதிர்ந்திடும் சுட்ட பழங்கள் பொறுக்குவதற்கு சிறுவர்கள் கூட்டம் அலைமோதின.

## ★ சிந்தனை வினா ★

**பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர்கள் ஏன் பார்க்க விரும்பவில்லை**

- ✷ பெருவாழ்வு வாழ்ந்த மரம் பேய்க்காற்றில் வேரோடு சாய்ந்து விட்டதால் மனவேதனை அடைந்தார்.
- ✷ ஊர்மக்கள் மரம் வீழ்ந்ததை அறிந்து பதற்றத்தில் கவலையுடன் சென்றதைப் பார்த்து அவ்விடம் செல்ல வேண்டாம் என நினைத்தனர்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. தாத்தா நட்டு வைத்த மரம்____________ **[விடை : நாவல்மரம்]**
2. இரவில் படையெடுத்து வரும் பழந்தின்னி ___________ **[விடை : வௌவால் கூட்டம்]**
3. 'கொல்லிப்பாவை' என்னும் சிற்றிதழை நடத்தியவர் ______ **[விடை : ராஜமார்த்தாண்டன்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# இயல் இரண்டு

உரைநடை உலகம்


# விலங்குகள் உலகம்

9A5Y59

## நுழையும் முன்

வளம் நிறைந்த நிலம், அடர்ந்த மரம், செடி, கொடிகள், நன்னீர், நறுங்காற்று என அனைத்தும் நிரம்பியது காடாகும். இது பறவைகள், விலங்குகள், தாவரங்கள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடமாகும். காடுகளின் செழிப்புக்குக் காட்டுயிரிகள் உதவுகின்றன. மனிதனின் முதல் இருப்பிடம் காடுதான். அதன் மரபுத் தொடர்ச்சியாகத்தான் காட்டைப்பற்றியும் காட்டு விலங்குகள் பற்றியும் அறியும் ஆர்வம் மனிதர்களிடம் இன்றும் தொடர்கிறது. காட்டு விலங்குகளின் உறைவிடமான முண்டந்துறை புலிகள் காப்பகத்துள் ஓர் உலா வருவோமா !

**மனவரைபடம்**




## கற்பவை கற்றபின்

**1) விலங்குகள் தொடர்பான பழமொழிகளைத் திரட்டி வருக.**

**(எ.கா) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது**

- ஆனைக்கும் அடிசறுக்கும்
- வீட்டில் எலி, வெளியில் புலி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



- ✷ எறும்பு ஊறக் கல்லும் தேயும்
- ✷ ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுகிறது
- ✷ கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
- ✷ யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே.
- ✷ நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்.

**1) காட்டு விலங்குகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. ஆசிய யானைகளில் ஆண் - பெண் யானைகளை வேறுபடுத்துவது __________

   அ) காது ஆ) தந்தம் இ) கண் ஈ) கால்நகம்

   **[விடை : தந்தம்]**

2. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் __________

   அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை

   இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம் **[விடை : முண்டந்துறை]**

3. காட்டாறு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

   அ) காடு + ஆறு ஆ) காட்டு + ஆறு இ) காட் + ஆறு ஈ) காட் + டாறு

   **[விடை : காடு + ஆறு]**

4. 'அனைத்துண்ணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

   அ) அனைத்து + துண்ணி ஆ) அனை + உண்ணி

   இ) அனைத் + துண்ணி ஈ) அனைத்து + உண்ணி

   **[விடை : அனைத்து + உண்ணி]**

5. 'நேரம் + ஆகி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

   அ) நேரமாகி ஆ) நேராகி இ) நேரம் ஆகி ஈ) நேர் ஆகி

   **[விடை : நேரமாகி]**

6. 'வேட்டை + ஆடிய' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

   அ) வேட்டை ஆடிய ஆ) வேட்டையாடிய

   இ) வேட்டாடிய ஈ) வேடாடிய **[விடை : வேட்டையாடிய]**

### ★ கோடிட்ட இடத்தை நிரப்புக ★

1. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' - என்று அழைக்கப்படும் விலங்கு __________

   **[விடை : புலி]**

2. யானைக் கூட்டத்திற்கு ஒரு __________ யானைதான் தலைமை தாங்கும்

   **[விடை : பெண்]**

3. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் __________ **[விடை : அடர்ந்த முடிகள்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



## குறுவினாக்கள்

**1. காடு - வரையறுக்க.**

- மனித முயற்சியின்றி வளர்ந்த மரங்கள், செடிகள், கொடிகள், புல், புதர்கள், பூச்சியினங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடம்தான் காடாகும். இடை இடையே காட்டாறுகளும் நீரோடைகளும் இருக்கும்.

**2. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?**

- யானைகள் பொதுவாக மனிதர்களைத் தாக்குவதில்லை.
- மனிதர்கள் அவைகளின் வழித்தடங்களில் குறுக்கிடும் போதுதான் தாக்குகின்றன.

**3. கரடி 'அனைத்துண்ணி ' என அழைக்கப்படுவது ஏன் ?**

- கரடி ஓர் அனைத்துண்ணியாகும்.
- இது பழங்கள், தேன் போன்றவற்றை உண்ணும் ; மரங்களில் ஏறும்.
- உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல் ஆகியவற்றையும் தேடி உண்ணும்.
- கறையான் அதற்கு மிகவும் பிடித்த உணவாகும். எனவே, கரடி ஓர் அனைத்துண்ணியாகும்.

**4. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக**

- இந்தியாவில் சருகுமான்,மிளாமான், வெளிமான் எனப் பலவகையான மான்கள் உள்ளன.
- எல்லாவகை மான்களிலும் நம் நாட்டுப் புள்ளிமான்களே அழகில் சிறந்தவையாகும்.

## சிறுவினா

**புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

- புலிகள் தனித்து வாழும் இயல்புடையவை.
- ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும்.
- மற்ற புலிகள் அந்த எல்லைக்குள் செல்லாது.
- கருவுற்ற புலியானது தொண்ணூறு நாட்களின் இரண்டு அல்லது மூன்று குட்டிகளை ஈனும், அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்த்து வரும். அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளையும் பிரித்துக் தனியாக அனுப்பிவிடும்.
- புலிதான் ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு.
- புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை. எனவே, அதனைப் பண்புள்ள விலங்கு என்று கூறுவோம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## ★ சிந்தனை வினா ★

**காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.**

- ❖ "காடு செழித்தால் நாடு செழிக்கும்" என்பார்கள். ஆனால், காட்டினை அழித்து நாட்டினை உருவாக்குகிறார்கள்.
- ❖ இக்காட்டினை அழிப்பதனால் மழைபொழிவு குறையும். தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும்.
- ❖ மண் அரிப்பு ஏற்பட்டும் வறட்சியும், மக்களின் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்படும்.
- ❖ காட்டினை அழிப்பதனால் அங்கு வாழும் உயிரினங்கள் அனைத்தும் அழிந்துவிடும். அவைகளின் பயன்களும் நமக்குக் கிடைக்காமல் போய்விடும்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. ஒரு யானை நாள் ஒன்றுக்கு ________ புல் உணவாக உட்கொள்ளும்.

**[விடை : 250 கிலோ]**

2. மிகுந்த நினைவாற்றல் கொண்ட விலங்கு ________

**[விடை : யானை]**

3. தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் ________

**[விடை : மேட்டுப்பாளையம் (கோவை மாவட்டம்)]**

4. நம் நாட்டில் அழகில் சிறந்த மான் ________

**[விடை : புள்ளி மான்]**

5. இயற்கை விஞ்ஞானிகள் புலியையே ________ அரசன் என்கிறார்கள்.

**[விடை : காட்டுக்கு அரசன்]**

6. இந்தியாவில் __________ மாநிலத்தில் 'கிர் சரணாலயத்தில்' மட்டுமே ஆசியச் சிங்கங்கள் உள்ளன.

**[விடை : குஜராத்]**

### குறுவினா

**1. உலகில் உள்ள இரண்டு வகையான யானைகள் எவை ?**

ஆசிய யானை ஆப்பிரிக்க யானை

**2. கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் என்னென்ன படிப்புகள் உள்ளன ?**

- ❖ இளநிலை வனவியல்
- ❖ முதுநிலை வனவியல்

**3. உலகில் உள்ள இரண்டு வகைச் சிங்கங்கள் எவை ?**

ஆசியச் சிங்கம் ஆப்பிரிக்கச் சிங்கம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



இயல் இரண்டு

விரிவானம்

# இந்திய வனமகன்


(நேர்காணல்)

9Y7C41

## நுழையும் முன்

மனித முயற்சியின்றி உருவாகிய வானளாவிய மரங்களும் அடர்ந்த செடி கொடிகளும் நிறைந்த இடமே காடாகும். ஆனால் பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவில் உள்ள மணல் தீவில் அமைந்த இந்தக் காடு சற்று வேறுபட்டது. மணல் தீவுகளில் மூங்கில் மட்டுமே வளர வாய்ப்புண்டு என்பர். ஆனால் பல்வகை மரங்கள் நிறைந்த இந்தக் காட்டை ஒரு தனி மனிதர் உருவாக்கியுள்ளார். அவரைச் சந்திப்போம்.

**மனவரைபடம்**




## தெரிந்து கொள்வோம்

- 2012 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஜாதவுக்கு 'இந்திய வனமகன்' (Forest Man of India)' என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது.
- 2015 ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மஸ்ரீ விருதை வழங்கியுள்ளது.
- கௌகாத்தி பல்கலைக்கழகம் 'மதிப்புறு முனைவர்' பட்டம் வழங்கியுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

உங்கள் பள்ளி அல்லது நீங்கள் வாழும் பகுதியில் மரக்கன்று ஒன்றை நடுங்கள். அதனை நாள்தோறும் பாதுகாத்து வாருங்கள். அதன் விவரங்களைப் பதிவேட்டில் பதிவு செய்யுங்கள்.

- ❖ முக்கனிகளில் ஒன்றான வாழைக்கன்று ஒன்றை நட்டினேன்.
- ❖ அன்றாடம் நீர் ஊற்றினேன்
- ❖ அவற்றிற்குத் தேவையான இடு உரங்களை இட்டு வளர்த்தேன்.

---

## மதிப்பீடு

**ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?**

**முன்னுரை :**

அஸ்ஸாம் மாநிலத்தில் ஜோர்விராட் மாவட்டத்தைச் சேர்ந்த ஜாதவ்பயேங் பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவில் உள்ள தீவில் முப்பது ஆண்டுகள் தனது கடின உழைப்பால் ஒரு காட்டையே உருவாக்கினார். தமது வாழ்வையும் அக்காட்டிலேயே கழித்தவர். இக்காட்டினை எப்படி உருவாக்கினார் என்பதை பின்வருமாறு காணலாம்.

**காட்டை உருவாக்கிய முறை :**

1979 ஆம் ஆண்டு பிரம்மபுத்திரா ஆற்றில் ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டது. வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட ஏராளமான பாம்புகள், மரங்கள் இல்லாததால் இறந்தன. இந்தக் காட்சியைக் கண்ட ஜாதவ்பயேங்கையின் மனம் மிகவும் பாதித்தது. அவ்வாறென்றால், உலகில் உள்ள மரங்கள் அனைத்தும் அழிந்துவிட்டால் மனிதனும் இப்படித்தானே இறந்துபோவான் என்று நினைத்த அவருக்கு உடல் நடுங்கியது. உடனே அந்தத்தீவு முழுவதும் மரங்களை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. ஊர் மக்களிடம் அத்தீவில் மரம் வளர்க்க அவர் கூறிய பொழுது யாரும் அதை ஏற்கவில்லை.

**விடாமுயற்சி :**

ஜாதவ்பயேங் தன் கைகளில் கிடைத்த விதைகளை விதைத்து தண்ணீர் ஊற்றி வந்தார். ஆயினும் ஒன்று கூட முளைக்கவில்லை. பின்பு வனத்துறையினரிடம் நெருங்கிக்கேட்டபோது, அவர்கள் அதீதீவில் மூங்கில் மட்டுமே வளரும் என்றார். அவர் உற்சாகத்துடன் மூங்கிலை நட்டு வளர்க்கத் தொடங்கினார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜாதுநாத் என்பவரைச் சந்தித்து, இத்தீவில் மூங்கிலைத் தவிர வேறு மரங்கள் வளர என்ன செய்ய வேண்டும். எனக் கேட்டார். அதற்கு மண்ணின் தன்மையை மாற்ற வேண்டும் என்றார். உடனே மண்ணின் தன்மையை மாற்றி மரங்களை வளர்க்கத் தொடங்கினார்.

**புதிய காடும், அதன் வளமும் :**

மரங்கள் செழித்து வளர கால்நடைகள் வளர்த்து அவற்றின் சாணத்தை இயற்கை உரமாகப் பயன்படுத்தினார். அவர் வளர்த்த அனைத்து மரங்களுக்குப் பானையைக் கொண்டு சொட்டுநீர் பாசனம் மூலம் நீர்விட்டு வளர்த்து வந்தார். மரங்கள் வளரத்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



தொடங்கியவுடன் பறவைகள் வந்து தங்கின. மான், முயல். காட்டு மாடுகள் என விலங்குகள் பலவும் வரத் தொடங்கின. யானைகள் தங்கியிருக்கும் காடு வளமான காடு என்று சான்றோர்களின் கூற்றுப்படி, அங்கு யானைகளும் காணப்பட்டன. பாம்புகள், கழுகுகள், காண்டாமிருகங்கள் போன்ற காட்டு விலங்குகளும் அங்கு வரத் தொடங்கின. பின் புலிகளும் வந்து தங்கத் தொடங்கின.

**முடிவுரை :**

ஜாதவ்பயேங் போன்று நாமும் ஒரு காட்டை உருவாக்க முயல்வோம் ; அதற்கு அடையாளமாக நம் வீட்டைச் சுற்றி ஒருசில மரங்களை நட்டு வளர்ப்போம். அதற்கு நாம் அனைவரும் உறுதி ஏற்போம். மரம் வளர்ப்போம் ! மழை பெறுவோம் ! நாட்டின் வளம் காப்போம் !



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in




கற்கண்டு

இயல் இரண்டு

# நால்வகைக் குறுக்கங்கள்

22IUPZ

## மனவரைபடம்




## கற்பவை கற்றபின்

**ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் சொற்களைத் தொகுத்து எழுதுக.**

| ஐகாரக் குறுக்கம் | ஔகாரக் குறுக்கம் | மகரக் குறுக்கம் | ஆய்தக் குறுக்கம் |
|---|---|---|---|
| ஐந்து | ஔவை | போன்ம் | பஃறுளி |
| ஐவர் | கௌரி | மருண்ம் | பஃறொடை |
| ஐயா | ஔடதம் | தரும்வண்டி | கஃறீது |
| வடை | ஔவியம் | தரும் வளவன் | முஃடீது |
| கடலை | | | |
| படையல் | | | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. ‘வேட்கை’ என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ________.
அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு
**[விடை : ஒன்று]**

2. மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் ________.
அ) போன்ம் ஆ) மருண்ம் இ) பழம் விழுந்தது ஈ) பணம் கிடைத்தது
**[விடை : பணம் கிடைத்தது]**

3. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது ________.
அ) ஐகாரக் குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக் குறுக்கம்
**[விடை : ஔகாரக் குறுக்கம்]**

### ★ குறுவினா ★

**1. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும் ?**

ஔ, வெள என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கும்.

**2. சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது ?**

ஐகாரம் → சொல்லின் முதலில் 1 ½ மாத்திரை அளவும் இடையிலும், இறுதியிலும் 1 மாத்திரை அளவிலும் ஒலிக்கும்.

**3. மகரக்குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டகள் தருக.**

வலம் வந்தான்; போன்ம் ; மருண்ம் ;
பழம் விழுந்தது

### கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. ஒவ்வோர் எழுத்துக்கும் அதை ஒலிப்பதற்கு உரிய கால அளவு ________.
**[விடை : மாத்திரை]**

2. ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ________ மாத்திரை அளவில் ஒலிக்கும்
**[விடை : இரண்டு]**

3. ________ சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராது.
**[விடை : ஔகாரம்]**

4. மகரக்குறுக்கத்தின் கால அளவு ________ மாத்திரை **[விடை : கால்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



5. உயிர்க்குறில் பெறும் மாத்திரை அளவு ______________ **[விடை : ஒரு மாத்திரை]**

## குறு வினாக்கள்

**1. ஐகாரக் குறுக்கம் என்றால் என்ன ?**

❖ ஐகாரம் தனித்து வரும் பொழுது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கும்.

❖ முதலில் வரும்பொழுது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

❖ சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம்,ஐகாரக் குறுக்கம் எனப்படும்.

**2. ஔகாரக் குறுக்கம் என்றால் என்ன ?**

❖ ஔவையார், வௌவால் ஆகிய சொற்களில் உள்ள ‘ ஔகாரம் ’ தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஔகாரம் ஔகாரக் குறுக்கம் எனப்படும்.

❖ ஔகாரம் சொல்லின் இடையிலும், இறுதியிலும் வராது.

**3. ஆய்தக் குறுக்கம் என்றால் என்ன ?**

❖ முள் + தீது - முஃடீது ; கல் + தீது - கஃறீது எனச் சேரும். சொற்களில் உள்ள ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவில் இருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும்.

❖ இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம், ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

## மொழியை ஆள்வோம்

## கேட்க

**இயற்கை ஆர்வலர் ஒருவரது உரையைக் கேட்டு மகிழ்க.**

## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக

**1. காட்டு வளமே நாட்டு வளம் !**

“பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும் ”

என்றார் குழந்தைக் கவிஞர் சோலைகளின் இருப்பிடமே மயலயம் காடும் ஆகும். “நீரின்றி அமையாது உலகு ” என்பது உண்மை மொழி,

அத்தகைய நீரை நாம் மழை மூலம் பெறுகிறோம். மழைப் பொழிவிற்குப் பசுமைக்காடுகள் வேண்டும்.

காட்டு மூலிகைச் செடிகள் பல நமக்கு நோய் நீக்கும் மருந்துகளாகப் பயன்படுகின்றன. உடல்நலத்துக்கு உகந்த காடுகளைப் பாதுகாக்கும் மனப்பான்மை மக்களிடம் வளர்க்க ஏற்படுத்தப்பட்ட விழாவே ‘மரம் நடுவிழா ’ ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயற்கை அன்னை உறையும் எழில் இடமான காடுகளைப் பாதுகாக்க அனைவரும் முன் வரவேண்டும். ஒவ்வொருவருக்கும் தலையாய கடமை எனவும் உணர வேண்டும். வளமாக்குவோம் காடுகளை ; செழிக்கச் செய்வோம் நானிலத்தை!

**2. காட்டின் பயன்கள்**

ஆறுகளும் மலைகளும் இயற்கை தந்த செல்வங்கள். "ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்" என்பர். பயிர்வளர நீர்வளம் தேவை. நீரைக் கொடுப்பது ஆறே. அந்த ஆற்றுக்கும் நீர் கிடைக்க வேண்டும். என்றால், மயலயம் காடும் தேவைப்படுகின்றன.

மேகங்களைத் திரட்டிக் குளிரச்செய்து மழை பெய்விக்கின்றன. குளிர்ந்த காற்றுக்கு அடிப்படையாக விளங்குவன காடுகளே. மேலும் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்கவும் காடுகள் பயன்படுகின்றன.

தேக்கு, கருங்காளி, சந்தன மரங்கள் வீடுகள் கட்டவும், பல்வேறு பொருள்களைச் செய்யவும் மரங்கள் பயன்படுகின்றன. மேலும் காடுகளிலில் யானை, சிங்கம், புலி போன்ற விலங்குகள் வாழுமிடமாக காடுகள் அமைந்துள்ளன. பிணி நீக்கும் மருந்துகளாகிய மூலிகைப் பொருள்களும் காடுகளிலிருந்து கிடைக்கின்றன.

வீட்டிற்கும் நாட்டிற்கும் உதவும் காடுகளை நாம் கண்ணை இமை காப்பது போல காக்க வேண்டும். காடுகளை வளர்ப்போம் ! வாழ வைப்போம் ! வாழுவோம் !

**சொல்லக் கேட்டு எழுதுக**

* மரங்கள் வெயிலை மறைக்கும்.
* மனிதர் வாழ்வு இயற்கையோடு இயைந்தது.
* பெருவாழ்வு வாழ்ந்த மரம் பேய்க்காற்றில் சாய்ந்தது.
* காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு புலியாகும்.
* யானைகள் கூட்டமாக வாழும் இயல்புடையவை.

## அறிந்து பயன்படுத்துவோம்

பால் ஐந்து வகைப்படும். அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியனவாகும்.

**உயர்திணையில்,**

1. ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால் (எ.கா.) மாணவன், செல்வன்.
2. ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால்.(எ.கா) ஆதினி, மாணவி.
3. ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால்.(எ.கா) மாணவர்கள், மக்கள்.

**அஃறிணையில்,**

4. ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால்
   (எ.கா.)கல், பசு.
5. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால்
   (எ.கா.) மண் புழுக்கள், பசுக்கள்.

**எதிர்ப்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. மகளிர் | x | **ஆடவர் ;** | 2. அரசன் | x | **அரசி.** |
| 3. பெண் | x | **ஆண் ;** | 4. மாணவன் | x | **மாணவி.** |




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



5. சிறுவன் x **சிறுமி ;** 6. தோழி x **தோழன்.**


## படத்திற்குப் பொருத்தமான பாலை எழுதுக


ஒன்றன்பால்


ஆண்பால்


ஒன்றன்பால்


பெண்பால்


பலர்பால்


பலவின்பால்

## பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக

**(எ.கா) கண்ணகி சிலம்பு அணிந்தான் - கண்ணகி சிலம்பு அணிந்தாள்.**

1. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்
   **கோவலன் சிலம்பு விற்கப் போனான்.**
2. அரசர்கள் நல்லாட்சி செய்தார்
   **அரசர்கள் நல்லாட்சி செய்தனர்.**
3. பசு கன்றை ஈன்றன
   **பசு கன்றை ஈன்றது.**
4. மேகங்கள் சூழ்ந்து கொண்டது.
   **மேகங்கள் சூழ்ந்து கொண்டன.**
5. குழலி நடனம் ஆடியது.
   **குழலி நடனம் ஆடினாள்.**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in


## கட்டுரை எழுதுக

**நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

110, நெசவாளர் தெரு,
சத்திரப்பட்டி,
10.07.2021.

**அன்புள்ள நண்பனுக்கு,**

நலம், நலமறிய ஆவல், இங்கு நான் மற்றும் அனைவரும் நலமாக உள்ளோம். அங்கு நீ, உன் நண்பர்கள் மற்றும் பெற்றோர் அனைவரும் நலமாய் இருக்க இறைவனை வேண்டுகிறேன்.

கடந்த கோடை விடுமுறையில் மதுரைக்குச் சுற்றுலா சென்றிருந்தேன். அங்கு நான் பார்த்த (சென்ற) இடங்களை உனக்குக் கூற விரும்புகிறேன். மதுரை என்றால் தமிழ் மணக்கும் பூமியாகும். முதலில் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் சென்று முருகனைத் தரிசனம் செய்தேன். அடுத்து மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்றேன். அங்குள்ள நுணுக்கமான கலைநுட்பங்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். தாமரைக்குளம், குமரகுருபரரின் மீனாட்சி பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் கல்வெட்டுகளில் செதுக்கியிருந்ததையும் கண்டேன்.

பின்னர் திருமலைநாயக்கர் மஹாலுக்குச் சென்றேன். அங்குள்ள ஒவ்வொரு தூணும் கதைகள் பல சொல்லும், அங்கு நடன அரங்கு மிகவும் கலைநயத்துடன் உள்ளது. பினனர் நான்காம் தமிழ்ச்சங்கம் சென்று அங்குள்ள ஓலைச்சுவடிகளைப் பார்த்தேன். மதுரைப் பல்கலைக் கழகம், யானைமலை ஒத்தக்கடை, நரசிங்கம் திருக்கோவில் ஆகிய இடங்களுச் சென்றேன். மற்றவை பற்றி அடுத்த வாரம் நேரில் வரும்போது இன்னும் விளக்கமாக் கூறுகிறேன்.

இப்படிக்கு,
உன் ஆருயிர் நண்பன்,
இரா.சரவணன்.

உறைமேல் முகவரி :
பெறுநர்
கா.பாலசந்திரன்
11/36, வ.உ.சி. நகர்,
வேலம்பாளையம்,
கோவை - 3.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

### பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக

வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை அமைக்க.




| | | |
|---|---|---|
| கதை | கல் | இல்லை |
| இலை | புல் | இயல் |
| புழை | இல் | கலை |
| கடலை | தையல் | கழை |
| இழை | தை | கயல் |
| புடலை | புகல் | புதையல் |

### சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க

| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | தயிர் | கூடு | திடல் | பாட்டு |
| குருவி | கொய்யா | சோறு | பழம் | பறவை |
| விளையாட்டு | கூட்டம் | அவரை | போட்டி | காய் |

(எ.கா) வாழை + காய் = வாழைக்காய்
குருவி + கூடு = குருவிக்கூடு
விளையாட்டு + திடல் = விளையாட்டுத்திடல்
தயிர் + சோறு = தயிர்ச்சோறு
கொய்யா + பழம் = கொய்யாப்பழம்
பறவை + கூட்டம் = பறவைக்கூட்டம்

### விடுகதைகளுக்கு விடை எழுதுக

1. மரம் விட்டு மரம் தாவுவேன் ; குரங்கு அல்ல
வளைந்த வாலுண்டு ; புலி அல்ல.
கொட்டைகளைக் கொறிப்பேன் ; கிளி அல்ல.
முதுகில் மூன்று கோடுகளை உடையவன். நான் யார் ?............................

**[விடை : அணில்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



2. என் பெயர் மூன்று எழுத்துகளைக் கொண்டது.
முதலெழுத்தை நீக்கினால் மறைப்பேன்.
இரண்டாம் எழுத்தை நீக்கினால் குரைப்பேன்.
மூன்றாம் எழுத்தை நீக்கினால் குதிப்பேன். நான் யார் ? ?..........................

**[விடை : குதிரை]**

3. வெள்ளையாய் இருப்பேன் ; பால் அல்ல.
மீன் பிடிப்பேன் ; தூண்டில் அல்ல
தவமிருப்பேன் ; முனிவரல்ல நான் யார் ? ?........................... **[விடை : கொக்கு]**

## நிற்க அதற்குத் தக

என் பொறுப்புகள்...

1. என்னால் இயன்ற அளவு மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.
2. இயற்கைச் சமநிலையைப் பேணிப் பாதுகாப்பேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீவு | - | Island | உவமை | - | Prable |
| இயற்கை வளம் | - | Natural Resource | காடு | - | Jungle |
| வன விலங்குகள் | - | Wild Animals | வனவியல் | - | Forestry |
| வனப் பாதுகாவலர் | - | Forest Conservator | பல்லுயிர் மண்டலம் | - | Bio Diversity |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in




வாழ்வியல்

## இயல் இரண்டு

# திருக்குறள்

89CSZD

**மனவரைபடம்**




## நுழையும் முன்

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்"

என்று திருக்குறளின் பெருமையை ஔவையார் போற்றுகிறார். மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அஃது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பட்ட நூல் திருக்குறள். இது போன்ற ஒரு நூல் உலகில் எந்த மொழியிலும் இதுவரை தோன்றியது இல்லை என்பர். அத்தகைய பெருமைமிகு திருக்குறளைப் படிப்போம்.

## நூல் வெளி

திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று கூறுவர். இவர் முதற்பாவலர், பொய்யில் புலவர், சொந்தப்போதார் போன்ற சிறப்புப் பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறார்.

தமிழ்நூல்களில் 'திரு' என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் திருக்குறள் ஆகும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துபால் என்ற மூன்று பகுப்புகளைக் கொண்டது. இதில் அறம் - 38, பொருள் - 70, இன்பம் - 25 என மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்திற்கு 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன. இதற்கு முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி போன்ற பிற பெயர்களும் உள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612999 www.CBSEtips.in



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. வாய்மை எனப்படுவது ________

அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்

இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்

**[விடை : தீங்குதராத சொற்களைப் பேசுதல்]**

2. ________ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்

அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்

இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன் **[விடை : பொறாமை உள்ளவன்]**

3. 'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது________

அ) பொரு + செல்வம் ஆ) பொருட் + செல்வம்

இ) பொருள் + செல்வம் ஈ) பொரும் + செல்வம் **[விடை : பொருள் + செல்வம்]**

4. 'யாதெனின் ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது________

அ) யா + எனின் ஆ) யாது + தெனின்

இ) யா + தெனின் ஈ) யாது + எனின் **[விடை : யாது + எனின்]**

5. தன் + நெஞ்சு என்பதனைச் சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல்________

அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு

இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு **[விடை : தன்னெஞ்சு]**

6. தீது + உண்டோ என்பதனைச் சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல்________

அ) தீதுண்டோ ஆ) தீதுஉண்டோ

இ) தீதிண்டோ ஈ) தீயுண்டோ **[விடை : தீதுண்டோ]**

**சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்
ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல்.
இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்
ஈ) பொருள்களைச் சேர்த்தல்

**விடை :**

அ)பொருள் வரும் வழிகளை அறிதல்.
ஆ) பொருள்களைச் சேர்த்தல்
இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்
ஈ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்

### ★ குறுவினா ★

**1. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?**

ஒருவர் தன் நெஞ்சறிய பொய் சொல்லக் கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவனை வருத்தும்.

**2. வாழும் நெறி யாது ?**

ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழவேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவரின் யார்?**

உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

❖ கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க.

| பொருட்செல்வம் | எல்லாம் | பூரியார் | செல்வத்துள் |
|---|---|---|---|
| கண்ணும் | அருட்செல்வம் | உள | செவிச்செல்வம் |
| அச்செல்வம் | தலை | செல்வம் | - |

1. "அருட்செல்வம் செல்வத்துள்ள செல்வம் பொருட்செல்வம்
   பூரியார் கண்ணும் உள "
2. " செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
   செல்வத்துள் எல்லாம் தலை".

**பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடு.**

அறவழி என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர் தேசத்தந்தை காந்தியடிகள். அவர் தம் சிறு வயதில் 'அரிச்சந்திரன்' நாடகத்தைப் பார்தார். அதில் அரிச்சந்திரன் என்னும் மன்னர் 'பொய் பேசாமை' என்னும் அறத்தை எத்தகைய சூழ்நிலையிலும் தவறாமல் கடைப்பிடித்தார். இந்த நாடகத்தைக் கண்ட காந்தியடிகள் தாமும் பொய் பேசாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இப்பண்பே காந்தியடிகள் எல்லார் இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது.

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
   அழுக்காறு இலாத இயல்பு.
2. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல்
3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

**விடை :** **உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

## கூடுதல் வினாக்கள்

## நிரப்புக

1. தமிழ்நூல்களில் 'திரு' என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் __________ ஆகும். **[விடை : திருக்குறள்]**
2. __________ செல்வங்களுள் சிறந்த செல்வமாகும். **[விடை : அருளாகிய செல்வமே]**
3. திருக்குறளை இயற்றியவர் __________ **[விடை : திருவள்ளுவர்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in



**பொருத்துக:**

1. அறம் - (அ) 25 அதிகாரங்கள்
2. பொருள் - (ஆ) 38 அதிகாரங்கள்
3 இன்பம் - (இ) 133 அதிகாரங்கள்
4 அதிகாரங்கள் - (ஈ) 70 அதிகாரங்கள்

**விடை :**[1-(ஆ); 2-(ஈ) ; 3-(அ) ; 4-(இ) ]

## குறுவினாக்கள்

**1. வாய்மை எனப்படுவது யாது ?**

வாய்மை எனப்படுவது மற்றவர்க்கு ஒரு தீங்கும் தராத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

---

**2. யாருடைய வாழ்வில் துன்பம் இல்லை?**

பிறருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் துன்பம் இல்லை.

---

**3. சிறந்த அரசின் செயல்களைக் கூறுக.**

- ✷ பொருள் வரும் வழிகளை அறிதல்
- ✷ அவ்வழியில் பொருள்களைச் சேர்த்தல்
- ✷ சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்
- ✷ காத்த பொருளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டுச் செலவிடுதல். ஆகியன சிறந்த அரசின் செயல்களாகும்.

---

**4. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?**

முதற்பாவலர் பொய்யில்புலவர்
செந்நாப்போதர் மாதானுபாங்கி

---

**5. திருக்குறளுக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை ?**

முப்பால் தெய்வநூல்
பொய்யாமொழி உலகப்பொதுமறை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612399 www.CBSEtips.in



# இயல் 2
## அலகுத் தேர்வு -1
### கவிதைப்பேழை

**மொத்த மதிப்பெண்கள் 25**

**I. நிரப்புக:** **5 x 1 = 5**

1. 'சுட்ட பழங்கள் ' என்று குறிப்பிடப்படுபவை _____________.
2. வாழை, கன்றை ____________.
3. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்தால் கிடைப்பது ____________.
4. பாரதிதாசனின் இயற்பெயர்____________.
5. உவமைக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் ___________

**II. பொருத்துக :** **3 x1= 3**

6. கொம்பு - (அ) மகிழ்ந்திட
7. துஷ்டி - (ஆ) கிளை
8. களித்திட - (இ) துக்கம்

**III. எதுகை, மோனை நயங்களை எழுதுக:**

9. "பச்சை மயில் நடிக்கும் பன்றி கிழங்கெடுக்கும்.
நச்சர வங்கலக்கும் - கிளியே நரியெல்லாம் ஊளையிடும் "

**IV. விடையளி:**

10. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?
11. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர் ?

**V. விடையளி:**

12. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?

**VI. அடிபிறழாமல் எழுதுக :**

13. பச்சை மயில் நடிக்கும்_______ எனத் தொடங்கும் பாடல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# அலகுத் தேர்வு -2

## உரைநடை உலகம், விரிவானம்

**மதிப்பெண்கள்: 25**

**I. நிரப்புக.** **5x1=5**

1. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம்________________.
2. யானைக் கூட்டத்திற்கு ஒரு ________________ யானைதான் தலைமைத்தாங்கும்
3. 'வேட்டை + ஆடிய' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________________.
4. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு ' - என்று அழைக்கப்படும் விலங்கு _________.
5. ஒரு யானை நாள் ஒன்றுக்கு ____________ கிலோ புல் உண்ணும்.

**II. விடையளி :** **5x2=10**

6. காடு - வரையறுக்க
7. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
8. கரடி 'அனைத்துண்ணி ' என அழைக்கப்படுவது ஏன்?
9. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன ?
10. பண்புள்ள விலங்கு எது ? ஏன் ?

**III. விடையளி :** **1x5=5**

11. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**IV. விடையளி :** **1x5=5**

12. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# அலகுத் தேர்வு 3
## (கற்கண்டு - வாழ்வியல்)

**மொத்த திப்பெண்கள்: 25**

**I. நிரப்புக** **5x1=5**

1. திருக்குறளில்_______________ அதிகாரங்கள் உள்ளன.
2. வாய்மை எனப்படுவது _______________
3. 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்தால் கிடைப்பது _______________.
4. 'தீது + உண்டோ ' - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______________.
5. செல்வங்களுள் சிறந்த செல்வம் அருளாகிய _______________ ஆகும்.

**II. விடையளி :** **2x2=4**

6. வாழும் நெறி யாது ?
7. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்களைக் கூறுக.

**III. அடிபிறழாமல் எழுதுக :** **1x4=4**

8. எதிலார்..... எனத் தொடங்கும் குறளையும்;
   'உளன்'என முடியும் குறளையும் எழுதுக.

**IV. கடிதம் எழுதுக :** **1x6=6**

9. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

**V. மொழிப்பயிற்சி:** (2)

**10. மாறியுள்ள குறளை சரியாக எழுதுக:**

"யாதெனின் எனப்படுவது இலாத தீமை
யாதென்றும் வாய்மை சொலல் "

**11. பிழை திருத்தி எழுதுக.** (1)


பசு கன்றை ஈன்றன

**12. கலைச்சொல் அறிக.** (1)

(அ)I Sland

(ஆ)Jungle (2)

**13. சொற்கள் அமை.**




1. _______________
2. _______________
3. _______________
4. _______________



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



இயல் மூன்று

# நாடு அதை நாடு



**கற்றல் நோக்கங்கள்**

- புறநானூற்றுப் பாடலின் மையக்கருத்து வெளிப்படும் வகையில் உணர்ச்சியுடன் வாய்விட்டுப் படித்தல்.
- கதைப் பாடல் பகுதியைப் படித்து நயங்களை அறிதல்.
- நாட்டுப்பற்றில் சிறந்து விளங்கிய ஆளுமைகள் குறித்த தகவல்களைப் பாடப்பகுதி வழி புரிந்து கொள்ளுதல்.
- சொற்கள் மற்றும் தொடர்களில் பயின்றுவரும் வினைமுற்றுகளை அறிந்து பயன்படுத்துதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் மூன்று

கவிதைப்பேழை


# புலி தங்கிய குகை

PTYDYV

## நுழையும் முன்

தமிழர்கள் பழங்காலம் முதலே கல்வியிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினர். நாட்டைக் காக்கப் போர்க்களம் செல்வதைத் தம் முதன்மையான கடமைகளுள் ஒன்றாகக் கருதினர். கல்வியறிவும் கவிபாடும் திறனும் பெற்ற சங்ககாலத் தாய் ஒருவர் தம் மகனின் வீரத்தைப் பற்றிப் பெருமிதத்துடன் கூறும் செய்தியை அறிவோம்.

## மனவரைபடம்




* சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே*

- காவற்பெண்டு





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



## பாடலின் பொருள்

- ✶ (சால்புடைய பெண் ஒருத்தி புலவரின் வீட்டிற்குச் சென்று, "அன்னையே! உன் மகன் எங்கு உள்ளான்?" என்று கேட்டாள்).
- ✶ "சிறு அளவிலான எம் வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு, ஏதும் அறியாதவள் போல நீ "உன் மகன் எங்கே?" என கேட்கிறாய். அவன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் புலி தங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன் இங்கில்லை எனில் போர்க்களத்தில் இருக்கக்கூடும். போய்க் காண்பாயாக" என்று புலவர் பதிலளித்தார்.

**சொல்லும் பொருளும் :**

| | | |
|---|---|---|
| சிற்றில் | - | சிறு வீடு |
| கல் அளை | - | கற்குகை |
| யாண்டு | - | எங்கே |
| ஈன்ற வயிறு | - | பெற்றெடுத்த வயிறு |

## நூல்வெளி

காவற்பெண்டு சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர். சோழ மன்னன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவர் என்பர். கல்வியில் தேர்ச்சியும், கவிபாடும் ஆற்றலும் மிக்க இவர், சங்க கால மக்களின் வீரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இப்பாடலைப் பாடியுள்ளார். இவர் பாடிய ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் பண்டைக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, நாகரிகம், பண்பாடு, வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூலாக விளங்குகிறது. இந்நூலில் 86-ஆம் பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

**1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.**

| | |
|---|---|
| ➢ ஔவையார் | ➢ வெண்ணிக் குயத்தியார் |
| ➢ பொன்முடியார் | ➢ அள்ளூர் நன்முல்லையார் |
| ➢ காவற்பெண்டு | ➢ ஒக்கூர் மாசாத்தியார் |
| ➢ நப்பசலையார் | ➢ நக்கண்ணையார் |
| ➢ ஆதிமந்தியார் | ➢ காரைக்கால் அம்மையார் |
| ➢ வெள்ளி வீதியார் | ➢ காக்கை பாடினியார் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**2. பண்டைக்காலப் போர்க்கருவிகள் சிலவற்றைப் படம் வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுக.**



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. "யாண்டு" என்னும் செல்லின் பொருள் ____________.
   அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது **[விடை : எங்கு]**
2. 'யாண்டுளனோ?' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) யாண்டு+உளனோ? ஆ) யாண்+உளனோ?
   இ) யா+உளனோ? ஈ) யாண்டு +உனோ? **[விடை : யாண்டு+உளனோ?]**
3. 'கல் + அளை'என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) கல்லளை ஆ) கல்அளை இ) கல்லளை ஈ) கல்லுளை
   **[விடை : கல்லளை]**

### ★ குறுவினா ★

**தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?**

✶ தாய், தம் வயிற்றுக்குப் புலி தங்கிச் சென்ற குகையை உவமையாகக் கூறுகிறார்.

### ★ சிறுவினா ★

**தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக**

✶ தன் மகன் குறித்துத் தாய், அவன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை.

✶ ஆயினும், புலி தங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது.

✶ அவன் இங்கில்லை என்றால், போர்க்களத்தில் இருக்கக்கூடும். போய்க் காண்பாயாக என்று கூறினார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in



## ★ சிந்தனை வினா ★

**தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?**

- ✶ புலி மிகுந்த வலிமையுடையது : சுறுசுறுப்பானது : தன்னம்பிக்கை மிக்கது : வீரம் மிகுந்தது.
- ✶ இதைப் போல் வீரம் மிக்கவன் மகன்.
- ✶ இருள் நிறைந்த குகையில் புலி இருப்பது போல், இருள் நிறைந்த வீரம் மிக்க கருவறையில் தன் மகன் உறங்கி வளர்ந்தான்.
- ✶ புலி குகையை விட்டு வேட்டைக்குச் செல்வது போல. பகைவர்களை வேட்டையாடுவதற்கு மகன் போர்க்களம் சென்று இருக்கிறான்.
- ✶ ஆகையால், தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடப்படுகிறது.

---

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. காவற்பெண்டு சங்ககாலப் ____________ஒருவர்.
   **[விடை : பெண்பாற்புலவர்களுள்]**
2. புறநானூறு ____________நூல்களுள் ஒன்றாகும்.
   **[விடை : எட்டுத்தொகை]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



இயல் மூன்று

கவிதைப்பேழை

# பாஞ்சை வளம்


QF8P3F

## நுழையும் முன்

தமிழ்நாட்டில் பலவகையான நாட்டுப்புற இலக்கியங்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள் கதைப்பாடல் என்பது கதை தழுவிய நிலையில் அமையும் பாடல் ஆகும். அது சமூகக்கதைப் பாடல், வரலாற்றுக்கதைப்பாடல், புராணக்கதைப்பாடல் எனப்பலவகைப்படும். வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றுக் கூறும் கதைப் பாடலின் ஒரு பகுதியை அறிவோம்.



## மனவரைபடம்






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



சுத்தவீர சூரன் கட்ட பொம்முதுரை
துலங்கும் பாஞ்சை வளங்கள் சொல்வேன்

நாட்டு வளங்களைச் சொல்லுகிறேன் -பாஞ்சைக்
கோட்டை வளங்களைக் கேளுமையா
கோட்டைகளாம் சுத்துக் கோட்டைகளாம் -மதில்
கோட்டைகள்தான் கெட்டி வேலைகளாம்.

வீட்டிலுயர் மணிமேடைகளாம் - மெத்தை
வீடுகளா மதிலோடை களாம்
பூட்டுங்கதவுகள் நேர்த்திகளாம் - பணப்
பொக்கிஷ வீடும்பார் சாஸ்திகளாம்

ஆசார வாசல் அலங்காரம் - துரை
ராசன் கட்டபொம்மு சிங்காரம்
ராசாதி ராசன் அரண்மனையில் - பாஞ்சை
நாட்டரசன் கொலுவீற்றிருந்தான்.

விந்தையாகத் தெருவீதிகளும் - வெகு
விஸ்தாரமாய்க் கடை வாசல்களும்
நந்தவனங்களும் சந்தனச் சோலையும் - அங்கே
நதியும் செந்நெல் கமுகுகளும்,

வாரணச் சாலை ஒருபுறமாம் - பரி
வளரும் சாலை ஒருபுறமாம்
தோரண மேடை ஒருபுறமாம் - தெருச்
சொக்கட்டான் சாரியல்ஓர் புறமாம்

சோலையில் மாங்குயில் கூப்பிடுமாம் - வளம்
சொல்லி மயில் விளையாடிடுமாம்
அன்பு வளர்ந்தேறும் பாஞ்சாலநாட்டில் - சில
அதிசயம் சொல்கிறேன் கேளுமையா

முயலும் நாயை விரட்டிடுமாம் - நல்ல
முனையுள்ள பாஞ்சால நாட்டினிலே
பசுவும் புலியும் ஒரு துறையில் - வந்து
பால்குடிக்குந் தண்ணீர் தான் குடிக்கும்.

கற்நத பாலையுங் காகங் குடியாது - எங்கள்
கட்டபொம்மு துரை பேரு சொன்னால்
வரந்தருவாளே சக்க தேவி - திரு
வாக்கருள் செய்வாளே சக்க தேவி

## பாடலின் பொருள்

குறையில்லாத வீரனாகிய கட்டபொம்மன் இருந்து ஆட்சி செய்யும் பாஞ்சாலங்குறிச்சியின் வளங்களைக் கூறுகின்றேன்.

அந்நாட்டின் வளத்தையும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் வளத்தையும் கேளுங்கள். அந்நகரில் பல சுற்றுகளாகக் கோட்டைகள் இருக்கும். அவை மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாகக் கட்டப்பட்டிருக்கும்.

வீடுகள்தோறும் மணிகளால் அழகுசெய்யப்பட்ட மேடைகள் இருக்கும். வீடுகள் எல்லாம் மதில்களால் சூழப்பட்ட மாடிவீடுகளாக இருக்கும். வீட்டுக் கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வீடுகள் செல்வம் நிறைந்தவையாகவும் இருக்கும்.

அரண்மனை வாயில் முறைப்படி அழகுபடுத்தப்பட்டு இருக்கும். அழகு மிகுந்த அரசனாகிய கட்டபொம்மன் அரசவையில் வீற்றிருப்பான்.

புதுமையான தெருவீதிகளும் பெரும்பரப்பில் அமைந்த கடைகளும் இருக்கும். பூஞ்சோலைகளும் சந்தனமரச் சோலைகளும் ஆறுகளும் நெல்வயல்களும் பாக்குத் தோப்புகளும் அந்நாட்டிற்கு அழகு சேர்க்கும்.

யானைக் கூடமும் குதிரைக் கொட்டிலும் ஒருபுறம் இருக்கும். தோரணங்கள் கட்டப்பட்ட மேடையும் தாயம் ஆடுவதற்கான இடமும் ஒருபுறம் இருக்கும்.

சோலைகளில் குயில்கள் கூவும். மயில்கள் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடும். அன்பு வளரும் நாடாகிய பாஞ்சாலங்குறிச்சியில் நிகழும் சில விந்தைகளைச் சொல்கிறேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



வீரம் மிகுந்த நாடாகிய பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்கவரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டிவிடும். பசுவும் புலியும் நீர்நிலையின் ஒரே துறையில் நின்று பால்போன்ற தண்ணீரைக் குடிக்கும்.

மன்னன் கட்டபொம்மனின் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக்கூடக் காகம் குடிக்காது.

சக்கமாதேவி பாஞ்சாலங்குறிச்சிக்குத் திருவாக்கு அருள்வாள்.

**சொல்லும் பொருளும் :**

| | | |
|---|---|---|
| சூரன் | - | வீரன் |
| பொக்கிஷம் | - | செல்வம் |
| சாஸ்தி | - | மிகுதி |
| விஸ்தாரம் | - | பெரும்பரப்பு |
| வாரணம் | - | யானை |
| பரி | - | குதிரை |
| சிங்காரம் | - | அழகு |
| கமுகு | - | பாக்கு |

## நூல்வெளி

கட்டபொம்மன் கதைப்பாடல்கள் பல வடிவங்களில் வழங்கி வருகின்றன. அவை பலரால் பதிப்பிக்கப்பட்டுள்ளன. நம் பாடப்பகுதி நா.வானமாமலை தொகுத்து வெளியிட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல் என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

## கற்பவை கற்றபின்

உங்கள் வீட்டில் உள்ள பெரியோரிடம் நாட்டுப்புறக்கதைப் பாடல்களைக் கேட்டு வந்து வகுப்பறையில் பகிர்க.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. ஊர்வலத்தின் முன்னால் ______________ அசைந்து வந்தது.
   அ) தோரணம் ஆ) வானரம் இ) வாரணம் ஈ) சந்தனம்
   **[விடை : வாரணம்]**
2. பாஞ்சாலங்குறிச்சியில் ____________. நாயை விரட்டிடும்.
   அ) முயல் ஆ) நரி இ) பரி ஈ) புலி **[விடை : முயல்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



3. மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது ____________.
   அ) மெத்தை விரிக்கப்பட்ட வீடு ஆ) படுக்கையறை உள்ள வீடு
   இ) மேட்டுப்பகுதியில் உள்ள வீடு ஈ) மாடிவீடு **[விடை : மாடிவீடு]**
4. 'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) பூட்டு+கதவுகள் ஆ) பூட்டும்+ கதவுகள்
   இ) பூட்டின்+ கதவுகள் ஈ) பூட்டிய+ கதவுகள் **[விடை : பூட்டும்+ கதவுகள்]**
5. 'தோரணமேடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) தோரணம்+மேடை ஆ) தோரண+மேடை
   இ) தோரணம் +ஓடை ஈ) தோரணம்+ஓடை **[விடை : தோரணம் + மேடை]**
6. வாசல் + அலங்காரம்என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) வாசல் அலங்காரம் ஆ) வாசலங்காரம்
   இ) வாசலலங்காரம் ஈ) வாசலிங்காரம் **[விடை : வாசலலங்காரம்]**

## ★ பொருத்துக ★

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பொக்கிஷம் | - | (அ) அழகு | **[விடை : செல்வம்]** |
| 2. | சாஸ்தி | - | (ஆ) செல்வம் | **[விடை : மிகுதி]** |
| 3. | விஸ்தாரம் | - | (இ) மிகுதி | **[விடை : பெரும் பரப்பு]** |
| 4. | சிங்காரம் | - | (ஈ) பெரும் பரப்பு | **[விடை : அழகு]** |

## ★ குறுவினா ★

**1. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.**
- ✶ பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பல சுற்றுகளாக அமைந்திருக்கும்.
- ✶ மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாகக் கட்டப்பட்டிருக்கும்.

**2. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?**
- ✶ பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளமான பூஞ்சோலைகளும், சந்தனமரச் சோலைகளும் ஆறுகளும் நெல்வயல்களும் பாக்குத் தோப்புகளும் அழகு சேர்க்கின்றன.

## ★ சிறுவினா ★

**1. பாஞ்சாலங்குறிச்சியின் வீடுகள் எவ்வாறு இருக்கும்?**
- ✶ பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள அனைத்து வீடுகளிலும் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும்.
- ✶ வீடுகள் அனைத்தும் மதில்களால் சூழப்பட்ட மாடி வீடுகளாக இருக்கும்.
- ✶ வீட்டுக்கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் செல்வம் நிறைந்தவையாகவும் இருக்கும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**2. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.**

- ✶ வீரம் மிகுந்த நாடாகிய பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்கவரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டிவிடும்.
- ✶ பசுவும் புலியும் நீர்நிலையின் ஒரே துறையில் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.
- ✶ மன்னன் கட்டபொம்மனின் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக்கூடக் காகம் குடிக்காது.

## ★ சிந்தனை வினா ★

**நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக் காரணம் என்ன?**

- ✶ பாஞ்சாலங்குறிச்சி பகுதியை ஆண்டவன் மாவீரன் கட்டபொம்மன்.
- ✶ வீரம் நிறைந்தவர், அஞ்சா நெஞ்சினர்.
- ✶ ஆங்கிலேயர், கட்டபொம்மனிடம் கப்பம் கட்டச் சொன்னபோது ஆங்கிலேய அதிகாரிகளை நேருக்கு நேராக நின்று தன் நாட்டு உரிமைக்காக எதிர்த்தவர்.
- ✶ எதிர்த்ததால், கட்டபொம்மனை ஆங்கிலேயர் தூக்கிலிட்டனர்.
- ✶ தன் நாட்டிற்காக தன் இன்னுயிரை நீத்த வீரன், கட்டபொம்மனை நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் பெரிதும் புகழப்படுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. கட்டபொம்மனின் நாடு ____________ **[விடை : பாஞ்சாலங்குறிச்சி]**
2. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்____________ **[விடை : கயத்தாறு]**
3. "பரி" என்பதன் பொருள் ____________ **[விடை : குதிரை]**
4. "கமுகு" என்பதன் பொருள் ____________ **[விடை : பாக்கு]**

### குறுவினா

**1. பாஞ்சாலங்குறிச்சியில் வீரம் நிறைந்த விலங்குகள் எவை ?**

✶ முயல் ✶ பசு

**2. குயில்கள், மயில்கள் ஆகியவற்றின் செயல்கள் என்ன?**

- ✶ குயில்கள் சோலைகளில் கூவும்
- ✶ மயில்கள் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



இயல் மூன்று

உரைநடை உலகம்


# தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

QURJ4R

## நுழையும் முன்

தமது தொண்டால் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த தலைவர்கள் பலர். நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டோர் பலர். சமுதாயப்பணி செய்தோர் பலர். அரசியல் பணி செய்தோர் பலர். இவை அனைத்தையும் ஒருசேரச் செய்து புகழ்பெற்ற தலைவர் ஒருவரைப் பற்றி அறிவோம்.

## மனவரைபடம்






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**நாட்டுக்கு உழைத்த சிறந்த பிற தலைவர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.**

- ✶ நேதாஜி → இந்தியதேசிய இராணுவத்தை அமைத்து ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்.
- ✶ வ.உ.சி→ஆங்கிலேயர்களை எதிராக சுதேசி கப்பலைச் செலுத்தி, நாட்டு மக்களுக்காக சிறையில் செக்கிழுத்தார்.
- ✶ வீரபாண்டிய கட்டபொம்மன் → ஆங்கிலேயருக்கு எதிராக நேருக்கு நேர்நின்று கப்பம் (வரி) செலுத்தமுடியாது என்று கூறியவர்.
- ✶ காந்தியடிகள்→நம் நாடு விடுதலை பெற அஹிம்சை வழியில் போராடி வெற்றி கண்டவர்.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. முத்துராமலிங்கத் தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் ______________.
   அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி இ) சாயல்குடி ஈ) மன்னார்குடி
   **[விடை : சாயல்குடி]**
2. முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் ____________.
   அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி
   **[விடை : நேதாஜி]**
3. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர்___.
   அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க ஈ) நேதாஜி
   **[விடை : திரு.வி.க]**

### ★ குறுவினா ★

**1. முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?**

- ✶ சுத்தத்தியாகி, உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் துணிச்சல் மிக்கவர்.
- ✶ தன் வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் தன் விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர் எனப் பாராட்டி பெரியார் கூறுகிறார்.

**2. முத்துராமலிங்கத் தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?**

- ✶ ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் வீர உரையாற்றினார். இதைக் கேட்ட மக்கள் ஆங்கில அரசு அச்சமடைந்து வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று முத்துராமலிங்கத்தேவருக்கு தடை விதித்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**3. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப்பற்றி எழுதுக.**

✶ முத்துராமலிங்கத்தேவர் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறம் உடையவர்.

✶ சிலம்பம், குதிரை ஏற்றம், சோதிடம், துப்பாக்கிச் சுடுதல், மருத்துவம் போன்ற பல துறைகளில் ஆற்றல் உடையவராகத் திகழ்ந்தார்.

## ★ சிறுவினா ★

**1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்புப் பற்றி எழுதுக.**

✶ வங்கச்சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ்சந்திரபோசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

✶ நேதாஜி அவர்களைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார்.

✶ முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்றுக் கி.பி.1939ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறாம் நாள் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார்.

✶ நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.

✶ விடுதலைக்குப் பின் நேதாஜி என்னும் பெயரில் வார இதழ் ஒன்றையும் நடத்தினார்.

**2. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?**

✶ ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தி, விவசாயிகள் துயர் துடைக்கப் பாடுபட்டார்.

✶ தமக்குச் சொந்தமான 32 ½ சிற்றூர்களில் இருந்த விளைநிலங்களை உழுபவர்க்கே பங்கிட்டுக் கொடுத்தார்.

✶ பாரதமாதா கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியாக விலை கிடைக்கச் செய்தார்.

✶ உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார்.

✶ 1938ஆம் ஆண்டு, மதுரையிலிருந்த நூற்பு ஆலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப.ஜீவானந்தத்துடன் இணைந்து போராட்டம் நடத்தினார்.

## ★ சிந்தனை வினா ★

**சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?**

✶ பொதுநலப் பண்பு.

✶ மனித நேயம் மற்றும் நாட்டுப்பற்று இருத்தல்.

✶ எளிமையாகவும், தியாக உணர்வும் வேண்டும்.

✶ நேர்மை மற்றும் ஒழுக்கப் பண்பும் வேண்டும்.

✶ பேச்சாற்றல் மற்றும் காலந்தவறாமை.

✶ சாதி, மத, இன வேறுபாடு பார்த்தல் கூடாது.

✶ மக்கள் நலம் காப்பதோடு உரிமைக்காகப் போராடுதல் பண்பும் வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. தென்னாட்டுச் சிங்கம் என்று புகழ்ந்தவர்___________
**[விடை : அறிஞர் அண்ணா]**
2. முத்துராமலிங்கத்தேவர்படிக்கும்பொழுது பரவிய நோய் ___________
**[விடை : பிளேக் ]**
3. தேசியம் காத்த செம்மல் எனச் சிறப்பிக்கப்படுபவர் ___________
**[விடை : முத்துராமலிங்கத்தேவர்]**
4. வங்கச்சிங்கம் என்று போற்றப்படுபவர்___________ **[விடை : நேதாஜி]**
5. முத்துராமலிங்கத்தேவர் முதன்முதலாக உரையாற்றிய இடம்___________
**[விடை : சாயல்குடி]**
6. குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்பட்ட ஆண்டு___________ **[விடை : 1948]**
7. ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தியவர்___________
**[விடை : முத்துராமலிங்கத்தேவர்]**
8. நேதாஜி மதுரைக்கு வந்த ஆண்டு___________ **[விடை : 1939]**
9. முத்துராமலிங்கத்தேவருக்கு இளமையிலேயே ___________ ஈடுபாடு இருந்தது.
**[விடை : அரசியல்]**

### குறுவினா

**1. முத்துராமலிங்கத்தேவர் பல்துறை ஆற்றல் பெற்றவர் என்பதைக் கூறுக.**

சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் போன்ற பலதுறைகளிலும் ஆற்றல் உடையவராகத் திகழ்ந்தார்.

**2. முத்துராமலிங்கத்தேவரின் பிறப்பு மற்றும் பெற்றோர் குறிப்பிடுக.**

பிறப்பு : 30.10.1908 இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் என்ற ஊரில் பிறந்தார்.
பெற்றோர் : திரு. உக்கிரபாண்டியத்தேவர், திருமதி.இந்திராணி அம்மையார்.

**3. முத்துராமலிங்கத்தேவரின் படிப்பு பாதியில் நிற்கக் காரணம் என்ன?**

இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது அவ்வூரில் "பிளேக்" என்ற நோய் பரவியதால் அவரின் படிப்பு பாதியில் நின்றது.

**4. முத்துராமலிங்கத்தேவரின் சிறப்புப் பெயர்கள் யாவை?**

✶சேதியம் காத்த செம்மல் ✶வித்யா பாஸ்கர் ✶பிரவசனகேசரி
✶சன்மார்க்க சண்டமாருதம் ✶இந்து புத்த சமய மேதை

**5. முத்துராமலிங்கத்தேவர் சிறையிலிருந்த இடங்களைக் கூறுக.**

✶ அமராவதி ✶ கல்கத்தா ✶ அலிப்பூர்
✶ வேலூர் ✶ சென்னை ✶ தாமோ


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## சிறுவினா

**1. முத்துராமலிங்கத்தேவருக்கு அரசு செய்த சிறப்புகள் யாவை?**

✶ பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில், அவர் தோன்றி மறைந்த அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் தமிழக அரசின் சார்பாக அரசு விழா கொண்டாடப்படுகிறது.

✶ சென்னையில் அரசு சார்பாகச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

✶ நாடாளுமன்ற வளாகத்தில் சிலை வைக்கப்பட்டுள்ளது.

✶ தமிழகச் சட்டமன்றத்தில் அவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

---

விரிவானம்

இயல் மூன்று

# கப்பலோட்டிய தமிழர்

R4A327

## நுழையும் முன்

தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி அந்நாளில் எந்நாட்டவரும் அறிந்த துறைமுக நகரம். அந்நகரின் பெருமையைத் தம் பெருமையாக்கிக் கொண்டவர் சிதம்பரனார். அவர் தன்னலம் துறந்த தனிப்பெரும் தொண்டர். "இந்தியக் கடலாட்சி எமதே எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி, நெறிமயங்கக் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார். நாட்டிலே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியதற்காக அவரைச் சிறைக் கோட்டத்தில் மாட்டி மகிழ்ந்தது ஆங்கில அரசாங்கம். சிறைவாசம் தீர்ந்த பின்னர்த் தூத்துக்குடிக்குத் திரும்பினார் சிதரம்பரனார். ஒரு நாள் மாலைப்பொழுது துறைமுகத்தின் அருகே உலாவச் சென்றார். பழைய நினைவுகள் எல்லாம் அவர் மனத்திலே படர்ந்தன. அக்கடற்கரையில் நின்று அவர் பேசியிருந்தால் என்ன பேசியிருப்பார்? இதோ அவர் வாயாலேயே கேட்போம்!

## நூல் வெளி

இரா.பி.சேது தமிழறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப் பேச்சாளர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். இவரைச் சொல்லின் செல்வர் எனப் போற்றுவர். செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவரே என்பர். இவரது தமிழின்பம் என்னும் நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல் ஆகும். ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம் - ஊரும் பேரும், மேடைப்பேச்சு உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

வ.உ.சிதம்பரனார் பேசுவதாக அமைந்த நம் பாடப்பகுதி கடற்கரையினிலே என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**பாரதியார், கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவராக உங்களைக் கற்பனை செய்து கொண்டு வகுப்பில் உரையாற்றுக.**

**பாரதியார்**

அனைவருக்கும் இனிய காலை வணக்கம். "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பதை மறைந்த மன்னர்களாலும், சாதி மத வேறுபாட்டால் சண்டையிட்டுக் கொண்ட மக்களாலும் நம் நாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுள்ளது. வணிக நோக்குடன் வந்த ஆங்கிலேயர் நாட்டு வளத்தையும் நம் உழைப்பையும் சுரண்டுகின்றனர். நம்மவரோ அச்சமும் பேழைமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டு துன்பத்தில் உழன்றுபோய் இருக்கிறார்கள்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வே"

என்பதை உணர்ந்து, நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற கூறிய திருவள்ளுவரையும்,

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று கூறிய திருமூலரையும்,நினைவுகள் கொண்டு,

"பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்"

நாம் அனைவரும் ஒன்று கூடி ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி வெற்றி காண்போம்.

நன்றி! வணக்கம்.

---

## மதிப்பீடு

**1. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்ற சிறப்புக்கெல்லாம் சொந்தக்காரர் வ.உ.சிதம்பரனார். இவர் ஆங்கிலேயர்களை எதிர்த்து "சுதேசி" என்னும் கப்பலைச் செலுத்தினார். இவரின் உரையாடலை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கமாகக் காணலாம்.

**சுதேசிக் கப்பல் :**

தமிழர்கள் வணிகத்தில் சிறந்து விளங்கினர். தூத்துக்குடியில் உள்ள கொற்கைத் துறைமுகத்தில் முத்துக்கள் ஏற்றுமதி சிறப்பாக நடைபெற்றது. ஆனால், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால் கப்பலில் ஆங்கிலக்கொடி கட்டப்பட்டு தமிழர்கள் கூலி வேலையாட்களாக இருந்தனர். இந்நிலையினை மாற்ற வள்ளல் பாண்டித்துரையின் தலைமையில் சுதேசிக் கப்பல் நிறுவனத்தை வ.உ.சி அவர்கள் நிறுவி, முதன் முதலாக ஆங்கிலேயருக்கு எதிராக கொழும்பு நோக்கிச் சென்றது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612539 www.CBSEtips.in



**ஆங்கில அரசின் அடக்குமுறை :**

ஆங்கிலேயருக்கு எதிராக செலுத்திய சுதேசிக் கப்பல் வணிகம் வளரத் தொடங்கியது. ஆங்கிலக் கப்பல் வணிகம் சரியத் தொடங்கியது. இதைப் பொறுக்காத ஆங்கில அரசு வ.உ.சி.அவர்களையும் அவருடன் இருந்தவர்களையும் மிரட்டியது. எதற்கும் அச்சப்படாமல் **"வந்தே மாதரம்"** என்ற முழக்கத்தை எழுப்பினார். மக்களும் எழுச்சி கொண்டு எழுந்தனர். இதைக் கண்ட ஆங்கில அரசு வ.உ.சி. அவர்களைச் சிறையில் அடைத்தது.

**வ.உ.சி. அடைந்த துயரம் :**

வ.உ.சி. அவர்கள் கோவை மற்றும் கண்ணூர்ச் சிறைகளில் கொடுமையான பணிகளைச் செய்தார். ஆகையால், அவர் உடல் சோர்ந்து, மெலிந்தது. ஆனால், உள்ளம் தளராமல் இருந்தார். சிறையில் செக்கிழுத்தார். சிறையில் கைத்தோல் உரிந்த நிலையிலும் கடுமையான பணியைச் செய்தார். அவருடைய செந்தமிழும் கன்னித்தமிழும் அவரின் கண்ணீரைப் போக்கியது.

**வ.உ.சி.யின் தமிழ்ப்பற்றும் ஏக்கமும்:**

வ.உ.சி. அவர்கள் தொல்காப்பியம், இன்னிலை முதலிய நூல்களைக் கற்றுத் தன் துன்பங்களை மறந்தார். மெய்யறிவு, மெய்யறம் போன்ற சிறு நூல்களையும் படைத்தார். "மனம்போல் வாழ்வு" என்னும் தலைப்பில், ஆங்கிலத்தில் ஆலன் என்பவர் இயற்றிய நூல் ஒன்றை மொழி பெயர்த்து தமிழில் எழுதினார்.

வ.உ.சி. அவர்கள் சிறையிலிருந்து வெளியே வந்தபோது தன் குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்தார். ஆனால் கடற்கரையில் தன் ஆசைக் குழந்தையான சுதேசிக் கப்பலைக் காணாமல் வருத்தம் அடைந்தார்.

**முடிவுரை :**

"பாயக் காண்பது சுதந்திர வெள்ளம்
பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்"

என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?" என்று உருக்கமாகப் பேசிக் கடற்கரையை விட்டு அகன்றார் வீர சிதம்பரனார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



கற்கண்டு

இயல் மூன்று

# வழக்கு

RPJD5R

## மனவரைபடம்

வழக்கு

- இயல்பு வழக்கு
  - ✶ இலக்கணமுடையது
  - ✶ இலக்கணப் போலி
  - ✶ மரூஉ
- தகுதி வழக்கு
  - ✶ இடக்கரடக்கல்
  - ✶ மங்கலம்
  - ✶ குழூஉக்குறி

## கற்பவை கற்றபின்

**மூவகைப் போலிகளிலும் எந்தெந்த எழுத்துகள் எந்தெந்த எழுத்துக்களாக மாறுகின்றன என்பதை அறிந்து தொகுக்க.**

| போலி | (எ.கா) | | சரியான எழுத்து | போலியான எழுத்து |
|---|---|---|---|---|
| முதல் | பசல் | பைசல் | ப | பை |
| | மஞ்சு | மைஞ்சு | ம | மை |
| | மயல் | மையல் | ம | மை |
| இடை | அமச்சு | அமைச்சு | ம | மை |
| | இலஞ்சி | இலைஞ்சி | ல | லை |
| | அரயர் | அரையர் | ர | ரை |
| கடை | அகம் | அகன் | ம் | ன் |
| | நிலம் | நிலன் | ம் | ன் |
| | பந்தல் | பந்தர் | ல் | ர் |

## மதிப்பீடு

### ★ பொருத்துக ★

1. பந்தர் - (அ) முதற்போலி **[விடை : கடைப்போலி]**
2. மைஞ்சு - (ஆ) முற்றுப்போலி **[விடை : முதற்போலி]**
3. அஞ்சு - (இ) இடைப்போலி **[விடை : முற்றுப்போலி]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



4. அரையர் - (ஈ) கடைப்போலி **[விடை : இடைப்போலி]**

## ★ குறுவினா ★

**1. வழக்கு என்றால் என்ன?**

முன்னோர் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ அந்தந்தச் சொற்களை அவ்வாறே பயன்படுத்துவது வழக்கு ஆகும்.

**2. தகுதி வழக்கின் வகைகள் யாவை?**

தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை.

✶ இடக்கரடக்கல் ✶ மங்கலம் ✶ குழூஉக்குறி

**3. வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது - இத்தொடரில் இடம் பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.**

✶ போலியான சொல் - நஞ்சு (முற்றுப்போலி)

✶ சரியான சொல் - நைந்து

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. வழக்கு ____________ வகைப்படும் **[விடை : இரண்டு]**
2. "கால்வாய்" என்பது____________போலியாகும். **[விடை : முன்பின்தொக்க]**
3. இராசபாளையம் என்பது இராசை என வருவது __________ **[விடை : மரூஉ]**
4. "விளக்கை அணை" என்பது ____________சொல்லாகும். **[விடை : அமங்கலச்]**
5. "போலி" என்பது ____________ வகைப்படும் **[விடை : மூன்று]**

## குறுவினா

**1. இலக்கணப்போலி என்றால் என்ன?**

இலக்கண முறைப்படி அமையாவிடினும், இலக்கணமுடையவை போலவே ஏற்றுக்கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.

**2. இடக்கரடக்கல் என்றால் என்ன? சான்று தருக.**

பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத் தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது இடக்கரடக்கல் எனப்படும்.

**3. குழூஉக்குறி என்பது யாது?**

ஒருகுழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக்கொள்ளும் சொற்கள் குழூஉக்குறி எனப்படும்.பலர் கூடியிருக்கும் இடத்தில் சிலர் மட்டும் தமக்குள் சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பினால் மற்றவர்கள் புரிந்து கொள்ள இயலாத வகையில் சொற்களைப் பயன்படுத்துவர்.

சான்று : பொன்னைப் பறி எனல் (பொற்கொல்லர் பயன்படுத்துவது)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612599 www.CBSEtips.in



**4. போலி என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

✶ சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ இயல்பாக இருக்க வேண்டிய ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து இடம் பெற்று அதே பொருள் தருவது போலி எனப்படும்.

✶ போலி மூன்று வகைப்படும். அவை,

✶ முற்போலி, ✶ இடைப்போலி, ✶ கடைப்போலி

---

## மொழியை ஆள்வோம்

### கேட்க

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பேச்சின் ஒலிப்பதிவைக் கேட்டு மகிழ்க.

✶ கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றைப் பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

1. தேசியம் காத்த செம்மல்
2. கப்பலோட்டிய தமிழர்

✶ **தேசியம் காத்த செம்மல் :**

அனைவருக்கும் வணக்கம். தேசியம் காத்த செம்மல் முத்துராமலிங்கத்தேவர் ஆங்கிலேயருக்கு எதிராக மக்களிடம் எழுச்சியுண்டாக்கும் வகையில் வீர உரையாற்றினார். இவரின் பேச்சைக் கேட்ட மக்கள் அனைவரும் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறு கொண்டு எழுந்தனர். இதனால் பலமுறை கைது செய்தது ஆங்கில அரசு. மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது. பலதுறைகளில் ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்தார். மக்களிடையே விடுதலை வேட்கையை ஊட்டியவர் முத்துராமலிங்கத்தேவர். எனவே, தேசியம் காத்த செம்மல் எனத் திரு.வி.க இவரைப் பாராட்டியுள்ளார். இவர் பல இன்னல்களை ஏற்று நாட்டு விடுதலைக்காக உழைத்தவர். தாம் ஈடுபடுகின்ற விடுதலைப் போராட்டப் பணிக்கு இல்லற வாழ்வு ஓர் இடையூறாக இருக்கும் என்று எண்ணித் தனக்குத் திருமண வாழ்வினைத் தவிர்த்தவர். அன்னாரின் வழி நடப்போம், உழைப்போம், வாழ்வில் உயர்வோம். நன்றி வணக்கம்.

✶ **கப்பலோட்டிய தமிழர் :**

அனைவருக்கும் இனிய காலை வணக்கம். "தோன்றின் புகழோடு தோன்றுக" என்ற வாக்கிற்குச் சொந்தக்காரர் செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்றெல்லாம் புகழுக்கு உரியவர் வ.உ.சி. அவர்கள்.

ஆங்கிலேயரை எதிர்த்து சுதேசிக் கப்பலை இயக்கிய பெருமைக்குரியவர். தமிழர்கள் வணிகத்தில் சிறந்திருந்தனர். ஆனால், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால் கப்பல்களில் ஆங்கிலக் கொடி பறந்த நிலையில் நம் தமிழர்கள் அவர்களிடம் கூலிக்காக வேலை செய்து வந்தனர். இந்த நிலையை மாற்றுவதற்காகவே வள்ளல் பாண்டித்துரைஅவர்களின் உதவியுடன் சுதேசிக் கப்பலை நிறுவி முதன் முதலாகக் கொழும்பு நோக்கிச் சென்றது. தமிழர்கள் தொடர்ந்து வணிகத்தில் வளர்ச்சி கண்டனர். ஆங்கிலேயர்கள் வணிகத்தில் வீழ்ச்சி கண்டனர். இதனைப் பொறுக்காது ஆங்கிலேயர் வ.உ.சி. அவர்களை மிரட்டிப் பார்த்தனர். எதற்கும் அடிபணியாத தமிழர்கள் "வந்தே மாதரம்" என்று வீரமுழக்க மிட்டனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



ஆகையால், கோவை மற்றும் கண்ணூர்ச் சிறையிலும் அடைத்து கொடும்பணி செய்யச் செய்தனர். கைத்தோல் உரிய கடும்பணி செய்தபோது எதற்கும் அஞ்சாமல் வீரமாகச் செயல்பட்டார். இத்தகையோரைப் போல் நாட்டுக்காக உழைப்போம். அவர்களின் வீர வரலாற்றைப் பறைசாற்றுவோம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி.

## சொல்லைக் கேட்டு எழுதுக

1. அவன் எங்குள்ளான் என எனக்குத் தெரியவில்லை.
2. வீடுகள்தோறும் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும்.
3. தெய்வீகத்தையும் தேசியத்தையும் தமது இரு கண்களாகக் கருதியவர் முத்துராமலிங்கத்தேவர்.
4. தொல்காப்பியத்தைப் படித்து தொல்லையெல்லாம் மறந்தேன்.
6. இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல் இலக்கணமுடையது ஆகும்.

## அறிந்து பயன்படுத்துவோம்

ஒரு தொடரில் மூன்று பகுதிகளில் இடம் பெறும். அவை : 1.எழுவாய், 2. பயனிலை, 3. செயப்படுபொருள்

ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது எழுவாய்.

(எ.கா.) நீலன் பாடத்தைப் படித்தான்.

பாரி யார்?

புலி ஒரு விலங்கு.

இத்தொடர்களில் நீலன், பாரி, புலி ஆகியன எழுவாய்கள்.

ஒரு தொடரை வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது பயனிலை.

(எ.கா.) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

கரிகாலன் யார்,

கரிகாலன் ஒரு மன்னன்.

இத்தொடர்களில் கட்டினான், யார், மன்னன், ஆகியன பயனிலைகள், யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருள்.

(எ.கா.) நான் கவிதையைப் படித்தேன்

என் புத்தகத்தை எடுத்தது யார்?

நெல்லிக்கனியைத் தந்தவர் அதியமான்.

இத்தொடர்களில் கவிதை, புத்தகம், நெல்லிக்கனி ஆகியன செயப்படுபொருள்கள்.

## பின்வரும் தொடர்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பிரிக்க

1. வீரர்கள் நாட்டைக் காத்தனர்.
2. பொதுமக்கள் அந்நியத்துணிகளைத் தீயிட்டு எரித்தனர்.
3. கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீன்கொடி பறந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



4. திருக்குறளை எழுதியவர் யார்?
5. கபிலர் குறிஞ்சிப்பாட்டை எழுதிய புலவர்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| வீரர்கள் | காத்தனர் | நாட்டைக் |
| பொதுமக்கள் | எரித்தனர் | அந்நியத்துணிகளைத் |
| பாண்டியன் | பறந்தது | மீன்கொடி |
| எழுதியவர் | யார்? | திருக்குறளை |
| கபிலர் | எழுதிய புலவர் | குறிஞ்சிப்பாட்டு |

## எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமையும்படி ஐந்து தொடர்களை எழுதுக

1. முத்து படம் வரைந்தான்.
2. நான் வண்ணம் தீட்டினேன்.
3. பறவை வானில் பறந்தது.
4. ஆசிரியர் பாடம் கற்பித்தார்.
5. திருக்குறளை திருவள்ளுவர் இயற்றினார்.

## கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக

### நான் விரும்பும் தலைவர் வ.உ.சி.

**முன்னுரை :**

பழமையும், பெருமையும் மிக்க நம் இந்தியத் திருநாடு முந்நூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்தது. ஆங்கிலேயராட்சியை நம் நாட்டினின்று அகற்றக் கண்ணீரும் செந்நீரும் சிந்திப் போராடியவர்கள் பலர். அவர்களுள் "கப்பலோட்டிய தமிழன்" என்றும், "செக்கிழுத்த செம்மல்" என்றும் "தென்னாட்டுத்திலகர்" என்றும் போற்றப்படக் கூடியவர்தான் நான் விரும்பும் தலைவர் வ.உ.சி.சிதம்பரனார் அவர்கள். இவரைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

**பிறப்பும் இளமையும் :**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் 1872-இல் செப்டம்பர் 5ம் நாள் உலகநாதர் - பரமாயி இணையருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். தமிழ், ஆங்கிலமும் கற்று இவர் சட்டக் கல்வியும் பயின்று வழக்கறிஞரானார். உரிய பருவம் வந்தவுடன் 1885 ஆம் ஆண்டு வள்ளியம்மையாருடன் திருமணம் நடைபெற்றது.

**விடுதலைப் போரும் நட்பும் :**

வ.உ.சி. அவர்கள் வழக்கறிஞர்கள் தொழிலை மேற்கொண்டிருந்தாலும், நாட்டு விடுதலைப் போரில் முழுமையாக ஈடுபட்டார். "சுதந்திரம் எனது பிறப்புரிமை", "அதனைஅடைந்தே தீருவேன்" என்று முழங்கிய திலகரைப் போலவே தீவிரமாகப் பாடுபட்டார். இவரும் பாரதியாரும் சுப்பிரமணிய சிவாவும் உணர்வால் ஒன்றுபட்ட நண்பர்களாக இருந்தனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



**கப்பலோட்டிய தமிழன் :**

வ.உ.சி. அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக "சுதேசிக் கப்பல் கம்பெனி", வள்ளல் பாண்டித்துரையின் தலைமையில் தொடங்கினார். தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையில் கப்பல் போக்குவரத்தை நடத்தி வெற்றியும் கண்டார். இதனால் ஆங்கிலேயரின் வணிகம் சரியத்தொடங்கியது.

**ஆங்கிலேயரின் அடக்குமுறை:**

ஆங்கிலேயருகளுக்கு எதிராக வ.உ.சி. அவர்கள் மக்களை ஒன்றுதிரட்டி "வந்தே மாதரம்" என்று வீரமுழக்கமிட்டனர். இதைப் பொறுக்காத ஆங்கிலேயர்கள் வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்தது. கோவை மற்றும் கண்ணூர்ச் சிறையிலும் கடும்பணிகள் செய்யச் செய்தனர். கல்லுடைத்தார், செக்கிழுத்தார், கசையடிபட்டார். இக்கொடுமைகளையெல்லாம் கண்டு மனம் கொதித்தது எழுந்த பாரதி இறைவனிடம் "மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதும் நூலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ?" என்று முறையிட்டார்.

**முடிவுரை :**

நாட்டுக்கு உழைத்த நல்லோரான வ.உ.சி. அவர்கள் வழக்கறிஞராக மட்டுமில்லாமல் நூலாசிரியராவும், பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும்,மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கித் தமிழுக்கும், நாட்டுக்கும் தொண்டு செய்துள்ளார். நாடும், மொழியும் நமது இருகண்களாக எண்ணிய, நான் விரும்பும் தலைவராகிய வ.உ.சி. அவர்களின் உழைப்பையும் வீரத்தையும் போற்றி வணங்குவோம்.

## மொழியோடு விளையாடு

### இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக

(எ.கா) வீடு சென்றான் - விடு + கு + சென்றான் - வீட்டுக்குச் சென்றான்

1. மாடு புல் கொடுத்தார் மாடு + கு - மாட்டுக்குப் புல் கொடுத்தார்.
2. பாட்டு பொருள் எழுது பாட்டு + கு - பாட்டுக்குப் பொருள் எழுது.
3. செடி பாய்ந்த நீர் செடி + கு - செடிக்குப் பாய்ந்த நீர்.
4. முல்லை தேர் தந்தான் பாரி முல்லை + கு - முல்லைக்குத் தேர் தந்தான் பாரி.
5. சுவர் சாந்து பூசினாள் சுவர் + கு - சுவருக்குச் சாந்து பூசினான்.

### இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக

| | | | |
|---|---|---|---|
| கண் | அழகு<br>உண்டு | கண்ணழகு | கண்ணுண்டு |
| மண் | | மண்ணழகு | மண்ணுண்டு |
| விண் | | விண்ணழகு | விண்ணுண்டு |
| பண் | | பண்ணழகு | பண்ணுண்டு |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612399 www.CBSEtips.in



## அகம் என முடியும் சொற்களை எழுதுக

(எ.கா)நூலகம்

1. நாடகம்
2. படிப்பகம்
3. பதிப்பகம்
4. நகலகம்
5. எழிலகம்
6. அலுவலகம்
7. தொழிலகம்.
8. வானகம்

## கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக

(எ.கா) திருக்குறள் ங பால்களைக் கொண்டது.

1. எனது வயது **கஉ**.
2. நான் படிக்கும் வகுப்பு **எ**.
3. தமிழ் இலக்கணம் **ரு** வகைப்படும்.
4. திருக்குறளில் **கஙந** அதிகாரங்கள் உள்ளன.
5. இந்தியா **கசுசஎ** ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

## குறிப்புகளைக் கொண்டு தலைவர்களின் பெயர்களைக் கட்டங்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | ப் | பூ | ர் | கு | ம | ர | ன் |
| ரு | தா | கா | ன் | க | க் | க | நா | லை |
| வ | ந் | ம | யா | ர் | டு | ட் | க | ம |
| ள் | ஜி | ரா | ஜா | யா | ர் | ட | ம் | ன |
| ளி | ஜா | ச | ர | தி | யா | பொ | மை | ன் |
| ய | ரா | ர் | னா | ர | ப | ம் | த | சி |
| ம் | இ | டி | ண் | பா | ர | ம | மி | ற |
| மை | வா | ஞ் | சி | நா | த | ன் | ழி | ப் |
| ர் | யா | சி | ச் | நா | லு | வே | ல் | பு |

1. மூதறிஞர் - இராஜாஜி
2. வீரமங்கை - வேலு நாச்சியார்
3. பாஞ்சாலங்குறிச்சி வீரன் - கட்டபொம்மன்
4. வெள்ளையரை எதிர்த்த தீரன் - சின்னமலை
5. கொடிகாத்தவர் - திருப்பூர் குமரன்
6. எளிமையின் இலக்கணம் - கக்கன்
7. தில்லையாடியின் பெருமை - வள்ளியம்மை
8. கப்பலோட்டிய தமிழர் - சிதம்பரனார்
9. பாட்டுக்கொரு புலவன் - பாரதியார்
10. விருதுப்பட்டி வீரர் - காமராசர்.
11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி- நாகம்மை
12. மணியாட்சியின் தியாகி - வாஞ்சிநாதன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612559 www.CBSEtips.in



## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள்...**

1. விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகளை அறிந்து போற்றுவேன்.
2. தலைவர்களின் அரிய பண்புகளை உணர்ந்து பின்பற்றுவேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கதைப் பாடல் | - | Balled | பேச்சாற்றல் | - | Elocution |
| துணிவு | - | Courage | ஒற்றுமை | - | Unity |
| தியாகம் | - | Sacrifice | முழக்கம் | - | Slogan |
| அரசியல் மேதை | - | Political Genius | சமத்துவம் | - | Equality |

## இணையத்தில் காண்க

**வ.உ.சிதம்பரனார் வாழ்க்கைக் குறிப்புகளை இணையத்தில் தேடி எழுதுக.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# இயல் 3

## அலகுத் தேர்வு -1

### கவிதைப்பேழை

**மொத்த மதிப்பெண்கள் 25**

**I. நிரப்புக:** **5 x 1 = 5**

1. பாஞ்சாலங்குறிச்சியில் ____________ நாயை விரட்டிவிடும்.
2. 'வாசல் + அலங்காரம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
3. புறநானூறு ____________ நூல்களுள் ஒன்றாகும்.
4. "யாண்டு" என்னும் சொல்லின் பொருள்____________.
5. மயில்கள்____________வளத்தைக் கூறி விளையாடும்.

**II. பொருத்துக :** **4x1=4**

6. அளை - அ) யானை
7. சாஸ்தி - ஆ) பாக்கு
8. வாரணம் - இ) குகை
9. கமுகு - ஈ) மிகுதி

**III. அடிபிறழாமல் எழுதுக:** **1x6=6**

10. சிற்றில்....... எனத் தொடங்கும் புறநானூறு பாடலை எழுதுக.

**IV. விடையளி :** **2x2=4**

11. தம் வயிற்றுக்குத்தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?
12. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?

**V. விடையளி:** **2x3=6**

14. தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
15. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612339 www.CBSEtips.in



# அலகுத் தேர்வு - 2

## உரைநடை உலகம், விரிவானம்

**மதிப்பெண்கள்: 25**

**I. நிரப்புக.** **5x1=5**

6. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர் ________________.
7. குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்பட்ட ஆண்டு________________.
8. ‘தென்னாட்டுச் சிங்கம்’ எனப்போற்றப்பட்டவர் ________________.
9. வட இந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத் தடைவிதிக்கப்பட்ட தலைவர்___.
10. முத்துராமலிங்கத்தேவரை “தேசியம் காத்த செம்மல்”என்று பாராட்டியவர்___________.

**II. விடையளி :** **3x2=6**

6. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.
7. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?
8. முத்துராமலிங்கத்தேவரின் சிறப்புப் பெயர்கள் நான்கினைக் கூறுக?

**III. விடையளி :** **1x4=4**

9. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?

**IV. விரிவான விடையளி :** **1x5=5**

10. வ.உ.சி.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT :8925612359 www.CBSEtips.in



# அலகுத் தேர்வு -3
## கற்கண்டு, மொழிப்பயிற்சி

**மதிப்பெண்கள்: 25**

**I. நிரப்புக.** **5x1=5**

1. வழக்கு ________________ வகைப்படும்.
2. 'தசை' என்பது ________________ போலியாகும்.
3. 'சுடுகாடு' என்பதை ________________ எனக் கூறுவது மங்கலம் ஆகும்.
4. 'போலி' என்பது ________________ வகைப்படும்.
5. 'நிலம்' என்பதை 'நிலன்' என்று கூறுவது ________________ போலியாகும்.

**II. பொருத்துக :** **4x1=4**

11. பந்தர் - அ) முதற்போலி
7. மைஞ்சு - ஆ) முற்றுப்போலி
8. அஞ்சு - இ) இடைப்போலி
9. அரையர் - ஈ) கடைப்போலி

**III. விடையளி :** **3x2=6**

10. வழக்கு என்றால் என்ன?
11. இடக்கரடக்கல் என்றால் என்ன? சான்று தருக.
12. போலி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**IV. சிறுவினாக்கள் :** **1x7=7**

13. "நான் விரும்பும் தலைவர்" பற்றிக் கட்டுரை எழுதுக.

**V. மொழிப்பயிற்சி :** **1+1+1=3**

14. கலைச்சொல் அறிக :
 (அ) Courage (ஆ) Equality
15. தமிழ் எண்களை எழுதுக:
 (அ) நான் படிக்கும் வகுப்பு ________________.
 (ஆ) திருக்குறளில் ________________ அதிகாரங்கள் உள்ளன
16. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எடுத்து எழுதுக:
 வீரர்கள் நாட்டைக் காத்தனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## எங்கள் வெளியீடுகள்

| | |
|---|---|
| பெங்குயின் தமிழ் அமுது | Std : VI - XII |
| பெங்குயின் வினா-வங்கி | Std : X, XI, XII |
| English Guide & Work Book | Std : VI - XII |
| English Practice Book & Question Bank | Std : X, XI, XII |
| அறிவியல், சமூக அறிவியல் | Std : IX, X |

## ஆர்டர்கள் தொடர்புக்கு

**8925612359 - 8643007972**
**7010414574 - 8248737898**



# பெங்குயின் பப்ளிகேஷன்

62 - C ஆண்டாள்புரம், மாயாண்டிப்பட்டி தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125, விருதுநகர் மாவட்டம்

89256 12359 86430 07972
7010414574 - 8248737898

penguinpub.2014@gmail.com
www.penguinbooks.in


**விலை: 219**